# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම

KANNOTTAM

Registered as a News Paper in Sri Lanka

வெளியீடு:- 10 | 10 ஜனவரி 2001 | ரூபா 10.00


தலைமைகள் தேவைக்கேற்ப அவ்வப்போது தோன்றும் வரலாற்றில் தலைவர்கள் அரிதாகவே தோன்றுவார்கள்.

## மரத்தால் விழுந்தவனை மாடுகளேறி மிதிக்கின்றன!

# இந்த நிலை மாற வேண்டும்

**வடக்கு கிழக்கு வாழ் மக்கள் யுத்தத்தின் கொடுமையினாலும் இயற்கையின் சீற்றத்தினாலும் சொல்லொணா வேதனைகளை அனுபவித்து வருகிறார்கள். வீராப்புக்களாலும் வீண்வார்த்தை ஜாலங்களாலும் விடிவு கிடையாது. மக்களை நேசிப்பவர்கள் அனைவரும் யதார்த்த நிலையை உணர வேண்டும், அதற்குத்தக செயற்பட வேண்டும்.**

1964 இன் பின்னர் திருமலை சூறாவளியினால் பேரனர்த்தத்தைச் சந்தித்துள்ளது. 2000 குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்துள்ளன.

வவுனியா திருமலை நலன்புரி நிலையங்களின் மக்கள் மோசமான சுகாதார இருப்பிட உணவுப் பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்கள்.

திருமலை மீனவர்கள் தமது 50க்கு மேற்பட்ட வள்ளங்களையும், வலைகளையும் இழந்துள்ளனர்.

இதற்கிடையே யாழ்ப்பாணத்திற்குப் பிரயாணம் செய்ய வேண்டிய மக்கள் கொட்டும் மழையிலும் தமக்கு பிரயாண ஒழுங்கு செய்து தருமாறு திருமலையிலுள்ள ஆளுனரின் காரியாலயத்திற்கும், மாகாண செயலாளரின் காரியாலயத்திற்கும், திருமலை பிரதேச செயலகத்திற்கும் ஊர்வலம் நடத்தியுள்ளார்கள்.

ஏற்கனவே உள்ள மீன்பிடி தடைகள், கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தற்போதைய நிலை பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற கதைதான் இங்கு.



அடுத்தடுத்து மூன்று தடவை இலங்கையினது ரூபாவின் பெறுமதி இறங்கியுள்ளதும் விலைவாசிகள் ஏறியுள்ளதும் மிகக் கூடுதலாக வடக்கு கிழக்கு மக்களையே பாதிப்பதாக உள்ளன.

### மூத்திரத்தின் மத்தியில் சமுத்திரப் பயணம்

லங்கா முதித்த கப்பலில் பிரயாணம் செய்பவர்கள் சுற்றிவரக் கழிக்கப்படும் சிறுநீரின் குளிர்மையிலேயே நெரிசலின் வெக்கையைத் தணிக்க வேண்டிய அவல நிலை. அதுவும் கப்பல் பிரயாணத்திற்கு 600 ரூபா. அவ்வாறு கொழும்புக்கு வருவதற்கு விண்ணப்பம் செய்து அனுமதி பெறுவதற்காக அலைந்து திரிவதற்கு மாத்திரம் 500 ரூபாவுக்கு மேல் [illegible] வாகிறது.



பிரயாணம் செய்ய அன்றைய

(தொடர்ச்சி 10பக்கம்)

**2001**

**புதியதொரு சமாதான விடியலுக்கான பெரு நம்பிக்கையுடன் புத்தாண்டை எதிர்கொள்வோம் எம் மக்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்**

# காஷ்மீர் பிரிவினைவாதிகளின் செங்கோட்டை தாக்குதல்

காஷ்மீர் பிரிவினைவாத சக்திகள் டெல்லி செங்கோட்டையில் தாக்குதல் நடத்தியது வெறுமனே காஷ்மீர் பிரச்சினையுடன் தொடர்புபட்டதல்ல.

இந்தியாவினுள் முரண்பாடுகளையும் இரத்தக்களரியையும் ஏற்படுத்தி இந்தியாவைச் சீர்குலைத்து சின்னாபின்னபடுத்த எண்ணும் சக்திகளின் கூட்டுச்செயற்பாடேயாகும்.

அந்த சர்வதேச சக்திகள் பாகிஸ்தானை இந்திய உபகண்டத்தில் குழப்பம் விளைவிப்பதற்காக தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகின்றன.

இஸ்லாமிய அடிப்படைவாதமும் இதற்கு மேலதிகமான ஊட்டமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்துக்குஸ் மலைகளின் பள்ளத் தாக்குகளில் ஆப்கானிஸ்தானில் ஒரு பரந்த சுடுகாட்டை உருவாக்கியவர்கள்.... அங்கு ஊனமுற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கியவர்கள் அதனை இந்தியாவுக்கும் விஸ்தரிக்க முயல்கிறார்கள்.

காஷ்மீர் மக்களின் [illegible] என்னும் போது இந்தியாவில் அதி



கூடிய அதிகாரப் பகிர்வுக்கு உதாரணமாக திகழ்வது. உதாரணமாக காஷ்மீரில் வேறு மாநிலத்தவர்கள் எவரும் நிலவுரிமை, வாக்குரிமை உட்பட குடியுரிமைகள் எதனையும் பெறமுடியாது.

மேலும் அதிகார பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் அங்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காஷ்மீர் மட்டுமல்ல இந்தியாவின் அத்தனை மலைப்பகுதி மாநிலங்களும் பல்வேறு விசேட உரிமைகளைப் பெற்றிருக்கின்றன. புதிய மாநிலங்களை உருவாக்குவதிற் கூட இந்தியா அச்சமின்றி செயற்பட்டு வருகின்றது.

பாகிஸ்தான் வெவ்வேறு முகங்களுடன் வெவ்வேறு கோணங்களில் இந்தியாவிற்கெதிராக செயற்படுகிறது. சில வருடங்களுக்கு முன் தமிழ்நாடு கோயம்புத்தூரில் குண்டுகளை வெடிக்க வைத்து நூற்றுக் கணக்கான அப்பாவிகளின் படுகொலையை மேற்கொண்டதில் பாகிஸ்தான் உளவு ஸ்தாபனமான ஐ.எஸ்.ஐ யின் மறைகரங்கள் இருந்தமை வெளிப்படை.

(தொடர்ச்சி 07பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த நண்பர்களே!



**2001ம்** ஆண்டுக்கான புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு சம்பிரதாயமே எனினும் இதில் தவறு இல்லை. ஏன் அவசியமும் கூட மனிதனின் சமூக வாழ்க்கைக்கு உயிரோட்டம் தருவதில் பல சம்பிரதாயங்களும் பிரதானமான பாத்திரத்தை வகிக்கின்றன. மனிதனை மிருகத்திலிருந்து வேறுபடுத்துவதிலும் இந்த சம்பிரதாயங்களுக்கு பெரும் பங்குண்டு.

இந்தப் புத்தாண்டில் இலங்கையில் சமாதானம் மலரும் என்று பொய் சொல்ல நான் விரும்பவில்லை. சமாதானமாக வாழும் நிலை வேண்டும், சுதந்திரமாகப் பேசிடவும் சூழல் வேண்டும் என்பதெல்லாம் எனது விருப்பமும் உங்கள் விருப்பமுமே. ஆனால் அதற்கான நிலைமை இந்தப் புதிய ஆண்டில் உண்டு என்று எவராவது அழுத்திச் சொல்வார்களானால் ஒன்றில் அவன் ஏமாளியாக இருக்க வேண்டும் அல்லது அவன் ஏமாற்றுபவனாக இருக்க வேண்டும்.

நிலவுகின்ற உண்மைகளை சரியாகத் தெரிந்துக் கொண்டோமேயானால், தெளிவாகப் புரிந்து கொண்டோமேயானால் இங்கு சமாதானம் இன்னமும் கண்ணுக்குத் தென்படாத நட்சத்திரமாகவே உள்ளது.

சமாதானம் என்பது அரசியல் தீர்வு என்பதன் அடிப்படையிலேயே ஏற்பட முடியும். அரசியற் தீர்வு என்பது அடிப்படையில் அதிகாரப்பகிர்வு சம்பந்தப்பட்டதே. அதிகாரப்பகிர்வு என்பது மாகாணசபையை முடிந்த அளவுக்கு நிறைவான அதிகாரங்கள் கொண்டதாக சிறந்த முறையில் செயற்பட வைத்தல் என்பதே.

வடக்கு கிழக்கு மாகாணம் ஒன்றாக எப்படி இருப்பது? நிலம், பொலிஸ், நிதி போன்றவற்றின் மீது அதிகாரங்கள் எவ்வகை? போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதெல்லாம் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்துடன் சம்பந்தப்பட்டவையே.

ஏற்கனவே மாகாணசபை செயற்பாட்டில் இருக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இருக்கும் மாகாண சபை என்பது பிணந் தின்னிகளின் கூடாரமாகவே உள்ளது. அதைப்பற்றி அரசுக்கும் பெரிய அக்கறை இல்லை. மக்களுக்கும் இல்லை. ஆனால் மக்களுக்குச் சேரவேண்டியவற்றை பெருச்சாளிகள் (தமிழினப் பற்றுடன்) விழுங்கிக் கொண்டிருக்கின்றன. புலிகளுக்கு வேள்வி அவி (பங்கு) கொடுத்து விட்டால் இங்கு எந்த அரக்கனும் தேவனாகி விடுவான்.

## அன்புள்ள நண்பர்களே!

இங்கே நடந்துக் கொண்டிருக்கும் சண்டைகள் இன்னும் பல பத்து வருடங்களுக்கு மேல் நடந்தாலும் நோர்வேயென்ன உலக நாடுகள் ஒன்றிணைந்து மத்தியஸ்தத்துக்கு வந்தாலும் யார் எவர் என்ன சொல்லாடல்கள் பாவித்தாலும் மீண்டும் மீண்டும் ஏற்படப் போவதெல்லாம் அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சுக்களே.

அதிகாரப் பகிர்வுக்கான நிறுவனம் இந்த மாகாண அரசமைப்பாகவே இருக்க முடியும். அதற்கு பிரதேச சபை என்றோ, மாநில அரசு என்றோ ஏன் ஈழம் மாநில அரசு என்று கூட பெயர் வைக்கக்கூடும். ஆனால் இங்கு நிறம்தான் மாறுமே தவிர பாத்திரம் மாறாது.

பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் ஆதரவுடன் தமிழர்கள் ஒரு முகமாக நின்று பிரேமதாசா அரசை வலியுறுத்தி உரிய முறையில் அதிகாரப் பகிர்வினைப் பெற்றுக் கொண்டிருந்தால் இந்தக் கடந்த பத்தாண்டுகளில் நாம் கொடுத்த பலிகளையும், அழிவுகளையும் தவிர்த்திருக்கலாம். நாம் இன்று எமது பிரதேசத்தை எத்தனையோ மடங்கு விருத்தி செய்திருக்கலாம். அழகும் பொருளாதார வளர்ச்சியும் கொழிக்கும் பூமியாக மாற்றியிருக்கலாம்.

ஏன் சந்திரிக்கா அவர்கள் பதவிக்கு வந்த வேளையிலும் நல்ல சந்தர்ப்பங்கள் தேடி வந்தன. ஆனால் காலால் எட்டி உதைத்து மூதேவியோடு குடியிருப்பதிலேயே சுகம் கண்டார்கள்.

இரண்டாயிரமாம் ஆண்டு சந்திரிக்கா ஒரு அரசியல் யாப்பைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தார். அதில் பல குறைபாடுகள் இருந்தன. அதனைக் கரைத்துக்கொட்டி குறைபாடுகளை உருவாக்கியதில் பிரதான சக்தி ஐக்கிய தேசியக் கட்சியே. சந்திரிகாவின் அரசியல் யாப்பால் நாடு பிளவுபடப்போகின்றது என சிங்கள இனவாதத்தை எரியூட்டியது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கவில்லை என்பது மட்டுமல்ல பாராளுமன்றத்தில் இருந்த பல தமிழ் பிரதிநிதிகளும் ஆதரவளிக்கவில்லை.

சந்திரிக்காவின் பிரேரணையில் உள்ள குறைகளைச் சொல்லி எதிர்க்கும் தமிழர்கள் அந்தக் குறைபாடுகளுக்குக் காரணமான ஐக்கிய தேசியக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்து நிற்கிறார்கள், ஐ.தே.க.வுக்கு வாக்குப் போடச் சொல்கிறார்கள், வாக்குப் போடுகிறார்கள். ஐ.தே.கட்சி பதவியிலேற வேண்டும் என்று ஆசை கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சந்திரிக்கா திருப்திகரமான அரசியற் தீர்வை முன்வைக்கவில்லை என்று குறைப்பட்டுக்கொள்கிறார்கள்.

ஆற்றிலே போட்டால் குளத்திலிருந்தா எடுக்க முடியும். இங்கு அப்படித்தான் இருக்கின்றது. விந்தையான அரசியற் சிந்தனை.

## அன்பிற்கினிய நண்பர்களே!

சந்திரிக்காவென்ன! அவரைவிட மிகச்சிறந்ததாகக் கருதப்படக் கூடிய சிங்களத் தலைவர் வந்தாலும் ஒன்று. பாராளுமன்றத்தினூடாகத்தான் ஓர் அரசியல் யாப்பு வரவேண்டும். இரண்டு. பௌத்த பிக்குகளின் மகாசங்கங்களை எதிர்த்துக் கொண்டு ஒரு அரசியல் யாப்பு உருவாக முடியாது.

வரைமுறையை மீறிப்போவதாக இருந்தாலும் கூட ஒன்றில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான உறுப்பினர்களின் கைகள் உயர வேண்டும் அல்லது பெரும்பான்மையான சிங்கள மக்களின் அமோகமான ஆதரவு வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளை [illegible]

ஈழம் பிடிப்போம், திருகோணமலைக் கோட்டையில் புலிக்கொடி பறக்கும், உலகின் நான்காவது பெரிய படையையே வென்றவர்களுக்கு சிறிலங்கா இராணுவம் என்ன சுண்டைக்காய் என்றெல்லாம் சொல்லி கடைசியாக, தமிழ் சமுதாயம் முழுவதையும் அகதி முகாம்களிலும், அரசின் கூப்பன் அரிசியிலும் சீவிக்க வேண்டிய சமூகமாக மாற்றிவிட்டார்கள்.

நாம் முன்னர் சுதந்திர ஈழம். கோர நேரிட்டது. அதையும் இந்தப் புலிகள் தான் நாசமாக்கியது.

அந்த அவலை நினைத்துக் கொண்டு இப்போதும் உரலை இடிப்பது படுமுட்டாள்த்தனம். சுதந்திர ஈழம் சாத்தியமில்லை என்பது இப்போது பிரபாகரனுக்கும் நன்கு புரிந்திருக்கும்.

அதேவேளை வேறுவகையிலும் கற்பனையான அரசியற் தீர்வுக்கும் இங்கு சாத்தியமில்லை.

கற்பனைக் கோட்டைகளில் மட்டும் தமிழர்கள் சீவிப்பார்களானால் கடைசித் தமிழனும் கனடாவில் போய்க் குடியேறும் வரை தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது. எவ்வளவு விரைவாக, சாத்தியமான அளவுக்கு அதிகாரப்பகிர்வையும், அரசின் எல்லா அமைப்புக்களிலும் குறைந்த பட்சம் இன விகிதாசாரம் பேணப்படுவதற்கான ஏற்பாடுகளையும், மத்திய ஆட்சியமைப்பில் உரிய பங்கையும் பாதுகாப்பையும் தமிழர்கள் பெற்றுக் கொள்கிறார்களோ அதிலேதான் இலங்கைத் தமிழர்களின் விடிவு தங்கியிருக்கின்றது.

இந்த விடயதானங்களை தமிழர்களின் சமூக புத்தி (Social Intellegence) எப்போது உணர்வுபூர்வ மாகவும் தெளிவாகவும் தென்படுகிறதோ, அப்போதுதான் இந்த சமூக விடிவுக்கான முதற்படியில் காலடி எடுத்து வைத்தல் என்பது நடக்கும்.

இங்கே இப்போது நடப்பதெல்லாம் ஓர் நாடகமே. புலிகள் தங்கள் யுத்தத்திற்கான தந்திரங்களாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்கின்றது. அரசாங்கம் உலக நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தைக்குத் தயார் என அறிவிக்கின்றது. இந்த உள்நோக்கங்கள் கொண்ட போக்குகளைத் தெரிந்து கொண்டும் நாம் எதற்காக போலித்தனமாக, பொய்யான வார்த்தைகளால் சமாதானம் தெரிகின்றது, அமைதி கிட்டுகிறது, சுதந்திரம் வருகிறது என்று சொல்ல வேண்டும்.

நாமே நம்மை ஏமாற்றிக் கொள்ளும் ஒவ்வொரு நிமிடமும் எமது சொந்த சமூகத்தின் பல தலைமுறைகளைச் சவக்குழிக்கு அனுப்புகிறோம். என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

நாம் எமது மக்களுக்கும் தேசத்திற்கும் உருப்படியானதை... ஆக்கபூர்வமாகச் செய்யக்கூடியதை-எங்கள் அளவில் செய்யக்கூடியவற்றை உண்மையாகச் செய்தலே இங்கு பிரதான தேவையாக உள்ளது.

இப்போது எமது சமுதாயத்தில் பெரும்பாலான உண்மைகள் மிக ஆழத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன. உண்மைகளைத் தெரிந்தவர்களோ மௌனமாக இருக்கிறார்கள் அல்லது மறைத்து விடுகிறார்கள். உண்மையான திறமைசாலிகளெல்லாம் நமக்கேன் இந்த வம்பு என்று தம்மைத் தாமே ஒளித்து வைத்திருக்கிறார்கள்.

கண்களையும், வாயையும் காதுகளையும் பொத்திக் கொண்டிருக்கும் மகாத்மா காந்தியின் அந்த மூன்று குரங்குப் பொம்மைகளுக்கு எமது சமூகத்தில் விளக்கம் என்ன தெரியுமா? உண்மைகளைப் பார்க்காதே! உண்மைகளைப் பேசாதே!! உண்மைகளைக் கேட்காதே!!! என்பதாகத் தான் அமைந்துவிட்டது.

ஓர் உதாரணம்..... இப்போது தமிழர்களின் இலக்கிய விழாக்கள், சமய விழாக்களிலெல்லாம் இராமாயணம் பற்றித்தான் பேசுகிறார்கள். அதிலும் விபீஷனன் பாத்திரத்தைத் தவிர்த்து விடவே முயற்சிக்கிறார்கள். மகாபாராதம் பற்றிப் பேசுவதில்லை. ஏனெனில் அது அரசியல் விவகாரங்கள் நிறைந்தது. அது அவையளை கோபிக்க வைத்து விடும் என்கிறார்கள். இங்கு தர்ம நியாயங்கள், தர்க்க ரீதியான அறிவு, பகுத்தறிவான கருத்துக்கள் என்பவையெல்லாம் மூச்சிழந்து கிடக்கின்றன.

தூஷண பூசணங்களை பத்ம விபூஷணங்கள் என புகழ்ந்து விளக்குகிற அளவுக்கு இங்கு புத்தி ஜீவிகளின் எழுத்து விபச்சாரம் பெருகிப் போய்க் கிடக்கிறது.

கொலைகளைப் பாராட்டுகின்ற-கொலைகாரர்களை வழிபடுகின்ற பேர்வழிகளே இன்று சமூகத்தின் பிரமுகர்களாகத் தலை உயர்த்த முடிகின்றது.

உண்மையை மறைத்தே பழகிப் போனதால் இப்போது தமிழ்ச் சமூகத்திற்கு உண்மை என்றால் என்னவென்று தெரியாது. உண்மையானவர்கள் யார் என்று தெரியாது. பொய்களும் பொய்யர்களும் மிகச் சுலபமாக செல்வாக்குப் பெறுவதற்கே இங்கு வாய்ப்புக்கள் அதிகமாக நிலவுகின்றன. நேரத்திற்கேற்றவாறு பிழைப்பு வாழ்க்கை நடாத்துவதே சரி என்ற அளவுக்கு சமூக நியாயம் ஏற்பட்டிருக்கின்றது.

இது ஒரு சமூக நெருக்கடி, சமூகத்தைப் பீடித்து நிற்கும் நோய். சீரழிந்து கிடக்கும் ஒரு சமுதாயத்தில் இது மிகவும் சாத்தியம் என்பதுதான் இங்கு பெறப்படும் அனுபவம். இங்கு இழி சொற்களுக்கு உள்ளாகாமல் உண்மையாக வாழ்தல் என்பது மிக அரிது. பேய்களின் ஆளுகையின் கீழ் அறம் காத்தல் எத்தனை சிரமம். எவ்வாறாயினும் அறமே வெல்லும். எங்களை நோக்கி எத்தனை துரோகப்பட்டங்கள் எறியப்பட்டாலும், எத்தனை பழி சொற்கள் போடப்பட்டாலும், யார்தான் நம்பாவிடினும் தர்மத்தின் மீது நமக்கு நம்பிக்கை வேண்டும், உண்மையும் நேர்மையும் தோற்பதில்லை என்பதில் எமக்கு உறுதி வேண்டும்.

புலிகளும் இப்போது தங்கள் வாலைத் தாங்களே கடித்துக் கொண்ட நிலைதான். புலிகள் பத்தாயிரம் பேரைக் கொலை செய்தார்கள், பதினையாயிரம் பேரைக் கொல்லக் கொடுத்தார்கள், அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களின் சாவில் பிரதான பொறுப்புக்குரியவர்கள்.

புலிகள் எந்தப் பேச்சுவர்த்தை மூலமும் சமாதான நிலை எதையும் எட்டாமல் இப்படியோ அழித்துக் கொண்டு தாங்களும் அழிந்து கொண்டால் சரி.

அதற்குமாறாக, அதிகாரங்கள் சற்றுக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ கொண்ட மாகாண சபையைத் தான் பெயர் மாற்றம் செய்தோ அல்லது செய்யாமலோ பெறுவார்களாயின், கடந்த பத்து ஆண்டு கால யுத்தத்துக்கும் அதன் அழிவுகளுக்கும் கணக்குக் காட்ட வேண்டியேற்படும்.

மாகாணசபையை ஏற்றதனால் மற்றவர்களைத் துரோகிகள் என்று சொல்லிவிட்டு பின்னர் எந்த முகத்தோடு தாங்கள் மாகாண சபையை ஏற்கப் போகின்றார்கள்.

நோர்வேயும் இங்கு மாகாணசபைக்கு மேலாக வேறெதனையும் சாதிக்கப் போவதில்லை. அது முதலில் கனடிய அரசியலமைப்பில் தொடங்கி அப்பம் பிரிக்க ஆரம்பிக்கும். பிறகு அது தென்னாபிரிக்க அரசியலமைப்பாகி, அடுத்து வட அயர்லாந்துக்கான அரசியற் தீர்வில் வந்து நிற்கும். புலிகள் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று சொன்னாலும் கடைசியாக பிச்சையுமில்லாமல் நாயிடம் கடி வாங்கியது மட்டுமே மிச்சமாகும். இந்த ஏமாற்றநிலை தமிழர்களுக்கு வந்துவிடக்கூடாது.

ஓர் உழவன் எவ்வளவு உழுதான் எப்படி உழுதான் என்பதெல்லாம் எவ்வளவு அறுவடை செய்தான் என்பதனாலேயே மதிப்பு பெறும். அதில் கால அளவும் பிரதானம்.

புது வருட வாழ்த்துக்களோடு எனது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் அன்பு நண்பன்
அ. வரதராஜப்பெருமாள்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

37/2, 1/1, Wimalasara Road,
Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
7 1603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 1/1 நெவில் வீதி
திருகோணமலை.
☎ 026 24221

144A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழம்பிய குட்டை நிலையில் இலங்கை

புலிகள் ஒரு மாதகால ஒரு தரப்பு யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்கள்.

இந்த மாதிரியான ஒரு அறிவிப்பு புலிகளின் 20 வருட வரலாற்றில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் முன் வந்து முன் வைக்கப் படவில்லை. அந்த வகையில் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதற்கு முன்னர் 1986இன் இறுதிப் பகுதியில் திம்புக் கோரிக்கைகளுக்குப் புறம்பான ஒரு குறைந்தபட்சத் தீர்வு தொடர்பாக இந்திய அரசின் உதவியுடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதையும், 1989, 1990 காலப் பகுதியில் பிரேமதாசாவுடன் சமரசம் செய்து கொண்டு செயற்பட்டதையும் இந்த சந்தர்ப்பத்தில் மனங்கொள்ள முடியும்.

இதற்கு முந்தைய காலங்களில் புலிகள் தாங்களாக முன்வந்து யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளாவிட்டாலும், அதையொத்த காரியங்களை அவர்கள் வரலாற்றில் ஏற்கனவே மேற்கொண்டு வந்துள்ளமையையும் நாம் உணர முடியும்.

எது எப்படி இருப்பினும் இந்த யுத்த நிறுத்த அறிவித்தல் தமிழ் மக்களின் அவல வாழ்வில் மாறுதலை ஏற்படுத்தி நிம்மதியான சூழலைத் தோற்றுவிக்குமா என்பதே முக்கியமான கேள்வியாகும்.

பலமாக இருக்கும்போது முன்னேறுவதும், பலயீனமாக இருக்கும் போது பின் வாங்குவதும், கால அவகாசத்தைத் தேடுவது என்பதுவும் வழமையான போர்த்தந்திர நடவடிக்கைகளே. இப்போது புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தமானது இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறு வற்புறுத்தும் நோர்வேயினதும், இங்கிலாந்தினதும், மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் ஆதரவைத் தனது பக்கம் இழுத்துக் கொள்வதற்கான இராஜதந்திர முயற்சியா? அல்லது போர்க்களத்தில் பின்னடைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் புலிகள் அதிலிருந்து சிறிது தப்பித்துக் கொள்ளுவதற்காக எடுத்துள்ள யுத்த தந்திர முயற்சியா? அதாவது பந்தை அரசின் தரப்பிற்கு நகர்த்தி விடும் வேலையா? தன் தலை உருளுவதைத் தற்காலிகமாகக் காப்பாற்றிக் கொள்வதற்கான முயற்சியா? என்பதற்கான பதில்களை பொறுத்திருந்துதான் எதிர்பார்க்க வேண்டும்.





எது எப்படி இருப்பினும் புலிகளின் இந்த அறிவிப்பை பலரும் வரவேற்றுள்ளனர். குறிப்பாக பிரிட்டிஷ் துணையமைச்சர் பீற்றர் ஹெய்ன் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது இதயசுத்தியான முயற்சி என்று குறிப்பிட்டுள்ளார். உள்ளூரிலும் பல சமயத்தலைவர்களும், அரசியற் தலைவர்களும், தொண்டு ஸ்தாபனங்களும் வரவேற்றுள்ளன.

ஆனால் அரசு சமாதானத்திற்கான முயற்சிகளை வரவேற்பதாகத் தகவல் தொடர்பு அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். ஆனால் பிரதமரின் உரையோ 'மாற்றான் மண்டியிட வேண்டும் அல்லது மரணமடைய வேண்டும். அதுவரை யுத்தம் தொடரும்.' என்கிறார். மகாசங்கத்தினரின் அனுசரணையின்றி எந்த ஒரு அரசியற் தீர்வும் கொண்டு வரப்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் அதிகாரப் பகிர்விற்கான உறுதிப்பாடு, எண்ணங்களுக்கு மாறானதாகவே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் உரைகளும் அறிக்கைகளும் அமைகின்றன. சிஹல உறுமய, பேரினவாத பிக்குகளையும் திருப்திப்படுத்தும் வகையாகவே அவை அமைந்திருக்கின்றன.

1994ம் ஆண்டிலிருந்து அதிகாரப் பகிர்வுக்கு முக்கியத்துவம் அளித்து வந்த பொதுஜன முன்னணியின் அரசிற்கு அபகீர்த்திமிக்க தோற்றப்பாட்டை அளிப்பதாகவே இந்த முரண்பாடான போக்குகள் உருவாக்குகின்றன இத்தகைய நிலை நீடித்துச் செல்வது பொதுஜன முன்னணியின் அரசியல் எதிர்காலத்திற்குப் பெருங் கேட்டை விளைவிக்கும். இந்தக் கேட்டைத் தடுத்து நிறுத்துவதும், தொடர விடுவதும் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் கையில் தான் இருக்கிறது.

பாரிஸ் மாநாட்டில் அதிகாரப் பகிர்ந்தளிப்பை தான் எந்த விதத்திலும் நிறைவேற்றுவேன் என்று ஜனாதிபதி உறுதியளித்ததைப் பற்றி ஜே.வி.பி எதிர் குரல் எழுப்பி வருகின்றது. எப்படி அதனைச் செய்யப் போகிறார் என்று கேள்வியெழுப்பியுள்ளது. அவ்வாறானால் தாங்கள் வீதியிலிறங்கிப் போராட போவதாகவும் அட்டகாசமாகவே மிரட்டியுள்ளது.

இந்த முன்னாள் கிளர்ச்சிக்காரர்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா உருவாக்கிய 1978ம் ஆண்டு அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்கிறார்களா? அல்லது சந்தர்ப்பவாத அரசியலுக்காக அதனைப் பயன்படுத்து கிறார்களா? ஏனெனில் முன்னுக்குப் பின் முரணான சந்தர்ப்பவாத செயற்பாடுகளுக்கு நிறையவே உதாரணங்களை கூறலாம். மாகாணசபை உருவாகியபோது வீதியில் நங்கி ஆர்ப்பாட்டம் பண்ணியவர்கள் பின் அதே மாகாணசபைத் தேர்தல்களில் பங்கு பற்றி அதனை ஒரு பாதையாக பயன்படுத்தி பின்னர் பாராளுமன்றமும் சென்றுள்ளனர்.

இப்போது வேடிக்கை என்னவென்றால் சமஷ்டி முறை, அதிகார பகிர்வு என்பவற்றிற்கு எதிராக சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்கிறார்கள். இந்த அடி முட்டாள்தனமான நிலைப்பாட்டுக்கு ஆதரவாக தமிழ், முஸ்லீம் மக்களும், நல்லெண்ணங் கொண்ட சிங்கள மக்களும் அணிதிரள மாட்டார்கள். ஜே.வி.பி தனது உண்மையான பௌத்த சிங்கள இனவாத முகத்திற்கு மேலாக அணிந்திருக்கும் கவசமே தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் ஐக்கியம் என்கின்ற கபடத்தனமான கவச முகமூடி.

**இதற்கு முந்தைய காலங்களில் புலிகள் தாங்களாக முன்வந்து யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளாவிட்டாலும், அதையொத்த காரியங்களை அவர்கள் வரலாற்றில் ஏற்கனவே மேற்கொண்டு வந்துள்ளமையையும் நாம் உணர முடியும். எது எப்படி இருப்பினும் இந்த யுத்த நிறுத்த அறிவித்தல் தமிழ் மக்களின் அவல வாழ்வில் மாறுதலை ஏற்படுத்தி நிம்மதியான சூழலைத் தோற்றுவிக்குமா என்பதே முக்கியமான கேள்வியாகும்.**



எது எப்படி இருப்பினும் வாக்குறுதிகளை வழங்குவதும் அதனை காற்றில் பறக்க விடுவதும் புலிகளின் செயற்பாடுகளில் பல தடவை வெளிப்பட்டுள்ளன.

எனவே புலிகளின் இந்த அறிவிப்புத் தொடர்பாக அரசும் மற்றும் புலிகளை எதிர்க்கும் ஏனைய சக்திகளும் எச்சரிக்கை அடைவது இயல்பானதே.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் தனது உறுதிப்பாட்டை தெளிவு படுத்துவதற்கு புலிகள் இன்னும் பல முயற்சிகளை எடுத்தாக வேண்டும். ஏனெனில் கடந்தகால அனுபவங்கள் கசப்பானவையாகவும், இரத்தம் தோய்ந்தவையாகவும் உள்ளன.

ஐ.தே.க அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் சமாதான முன் முயற்சிகள் தொடர்பாகவும் தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைத்தால் சரி என்ற தோரணையில் நடந்து கொள்கின்றது.

பாரிஸ் மாநாட்டில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அரசுக்கு நிதியுதவி கிட்டக்கூடாது என்பதில் ஐ.தே.க குறியாக இருந்தது.



இனப்பிரச்சினையில் தமிழர் விரோதம், போலித்தனமான தேச பக்தியை வலியுறுத்தும் 'தீவு' ஆங்கிலப் பத்திரிகை ஒரு பக்கம் உறுதியான அரசை வலியுறுத்துகிறது. மறுபுறம் ஹக்கீம் போன்றவர்கள் ஊசலாட்டத்துடன்தான் இருக்கிறார்கள் என ஐ.தே.கவுக்கு ஆலோசனை கூறுகிறது. விலைவாசிகள் உயர்ந்துள்ளன. அரசைக் கவிழ்ப்பதற்கு இதுதான் தருணம் என்றெல்லாம் எழுதுகிறது.

ஐ. சிறி

சுதந்திரப் போராட்டப் பாரம்பரியமும், சொந்தமாக ஒரு பொருளாதாரமும் இல்லாத நாட்டின் அரசியல்வாதிகள், பத்திரிகைத்துறையினர் எப்படி இருப்பார்கள் என்பதற்கு இலங்கையின் இப்போதைய நிகழ்வுகள்-சம்பவங்கள் எடுத்துக்காட்டாக உள்ளன. இம்மாதிரியான நாடுகளில் இனவாதமும், வன்முறையும்தான் ஆட்சியையும் அதிகாரங்களையும் சுலபமாகக் கைப்பற்றிக் கொள்கின்றன.

இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும்போது மாத்திரமே இந்த நாட்டில் உண்மையான ஜனநாயக மனித உரிமைகளை, பொருளாதார வளர்ச்சியை, உறுதிப்படுத்திய அரசையும் சமூகத்தையும் உருவாக்க முடியும். ■

## யாழ் பல்கலைக.........

10ம் பக்க தொடர்ச்சி

தொடர்ந்தும் சமாதானத்தை வலியுறுத்தும் போராட்டங்களை முன்னெடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார். எம்மில் அனேகமானவர்கள் பார்வையாளர்களாக இருக்கும் நிலைமாறி சமாதானத்தை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

உப வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகள் குறித்தும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை குறித்தும் உரை நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்ட போதும் அவர் அதுபற்றி பேசவில்லை.

யாழ் பல்கலைகழகம் ஆசியாவிலேயே சிறந்த பல்கலைகழகம் என்றும், இந்தப் பல்கலைகழகம் இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைகழகங்கள் போலன்றி முற்றுமுழுதாக தமிழ் விரிவுரையாளர்களுடன் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறப்பாக இயங்கி வருகின்ற ஒரு பல்கலைகழகம் என்றும் குறிப்பிட்டார்.

மாணவர்கள் இதுவரை காலமும் தமது சொந்தப் பிரச்சினைகளுக்காகவே போராட்டம் நடத்தியதாகவும் இப்போது ஒரு பொதுவான பிரச்சினைக்காக போராட்டம் நடாத்த முன் வந்திருப்பது சிறந்த விடயம் என்றும் குறிப்பிட்டார்.

பல்கலைகழக மாணவர்கள் போராட்டம் நடத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது கல்வியிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைக்கு மாணவர்கள் வந்திருப்பது தனக்கு மகிழ்ச்சி தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்- நேற்றும்- இன்றும்

இந் நிகழ்ச்சிகள் 1960 இன் ஆரம்பங்களில் நடைபெற்றன. 1964 இல் யாழ்ப்பாணத்திலுள்ள மத்திய கல்லூரியின் 6ம் வகுப்பிலுள்ள ஓர் மாணவனை ஸ்கூல் இன்ஸ்பெக்டர் வகுப்பிற்கு வந்து கேட்ட கேள்விகள் சில:-

கேள்வி :- இலங்கை சுதந்திரம் பெற்றது எப்போது ?

பதில் :- 1948ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி.

கேள்வி :- யார் இப்பொழுது இலங்கையின் பிரதம மந்திரி ?

பதில் :- சிரியம்மா பண்டாரநாயக்கா.

கேள்வி :- வடக்கு கிழக்கிலுள்ள கைத்தொழிற்சாலைகள் என்னென்ன ?

பதில் :- காகிதத் தொழிற்சாலை, சீமெந்து தொழிற்சாலை, சீனித் தொழிற்சாலை, ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், சீநோர் மீன் பதப்படுத்தப்படும் தொழிற்சாலை.

கேள்வி :- யாழ்ப்பாணத்தில் விமானத்தளம் எங்கு அமைந்துள்ளது ?

பதில் :- பலாலியில்.

கேள்வி :- யாழ்ப்பாண ரயில் நிலையத்திற்கு கொழும்பிலிருந்து தினமும் எத்தனை ரயில்கள் வருகின்றன ?

பதில் :- யாழ் தேவி, உத்தரதேவி, மெயில்தேவி, குட்ஸ்தேவி,

கேள்வி :- யாழ்ப்பாணத்திற்கு எங்கிருந்து மின்சாரம் வருகின்றது ?

பதில் :- சுன்னாகம், லக்ஸபானா.

கேள்வி :- யாழ்ப்பாணத்திற்கு துறைமுகம் எங்குள்ளது ?

பதில் :- காங்கேசன்துறை.

ஏறத்தாழ 36 வருட முன்னேற்றங்களிற்குப் பிறகு அதே பாடசாலை, புதிய ஸ்கூல் இன்ஸ்பெக்டர், புதிய மாணவன், ஆயினும் அதே கேள்விகள்.

கேள்வி :- இலங்கை சுதந்திரம் பெற்றது எப்போது ?

பதில் :- வாத்தியார் அந்தப் பாடம் எடுக்கப் போகேக்கிலதான் ஆமி வந்து அவரைக் கூட்டிக் கொண்டு போனவை. அதாலை எங்களுக்கு உதைப்பற்றி ஒன்றும் தெரியாது.

கேள்வி :- யார் இப்பொழுது இலங்கையின் ஜனாதிபதி ?

பதில். :- டி.எஸ். சேனநாயக்கா.

கேள்வி :- வடக்கு கிழக்கிலுள்ள கைத்தொழிற்சாலைகள் என்னென்ன ?

பதில் :- துனுக்காய் கைக்குண்டு தொழிற்சாலை, புதுக்குடியிருப்பு கிரனேட் தொழிற்சாலை, செட்டிக்குளம் மிதி வெடித் தொழிற்சாலை, மாங்குளம் எறிவெடித் தொழிற்சாலை, கடைசியா மல்லாவியில் சைனீஸ் பாஸ்புட் தொழிற்சாலை.

கேள்வி :- யாழ்ப்பாணத்தில் விமானத்தளம் எங்கு அமைந்துள்ளது ?

பதில் :- சண்டையைப் பொறுத்து விமானம் இறங்கும். ஓடு தளம் நாளுக்கு நாள் மாறும். சில நேரம் பாக்கு நீரிணையிலும் இறங்கும்.

கேள்வி :- யாழ்ப்பாண ரயில் நிலையத்திற்கு கொழும்பிலிருந்து தினமும் எத்தனை ரயில்கள் வருகின்றன ?

பதில் :- ரயில் எண்டா என்ன ? லொறிதான் வருகிறது. லொறிக்கும் கப்பம், வர்ற சாமான்களுக்கும் கப்பம் எங்களுக்கிடைக்கிறது வெறும் அப்பம்தான்.

கேள்வி :- யாழ்ப்பாணத்திற்கு எங்கிருந்து மின்சாரம் வருகின்றது ?

பதில் :- ஆமி காம்பிலிருந்து விட்டு விட்டு வரும்.

கேள்வி :- யாழ்ப்பாணத்தின் துறைமுகம் எங்கேயுள்ளது ?

பதில் :- கிளாலியில்.

36 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணமும் சீரழிந்து, வாத்தியும் அதிபரும் இலக்சனிற்கு நோட்டீஸ் ஒட்டி- சமுர்த்தியில் 2000 ரூபா போனசும் வேண்டிக் கொண்டு போக, மாணவன்100 ஆண்டுகள் பின் தங்கிய ஆறுமுகநாவல மண்டபத்தில் இருக்கிறான்.

# அட என்னங்கடா !!!!!!!!!!

அண்மையில் ஒரு செய்தி:- தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் - இவர் ஒரு புலி தீவிர ஆதரவாளர்- மகாசிவம் என்பவரையும் கூட்டிக் கொண்டு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த் அவர்களைச் சந்தித்து யாழ்ப்பாணத்துக்கு பாடசாலைப் புத்தகங்களை உரிய நேரத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அமைச்சரும் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். உடனடியாகவே அதனை அங்கு சென்றவர்கள் செய்தியாக்கி தங்கள் சேவையை மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

இதில் எந்தத் தவறும் இல்லை. மக்கள் பிரதிநிதிகள் மந்திரிகளைச் சந்தித்து மக்கள் குறைகளுக்கென்ன! தங்கள் குறைகளுக்குத் தீர்வு கேட்டாலும் அதில் தவறேதும் இல்லை. மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதுதானே மந்திரிகளின் வேலை.

அஃது ஒருபுறமிருக்கட்டும்.

இங்கு பிரச்சினை என்னவென்றால் மந்திரியிடம் போனவர்கள் மக்கள் மத்தியில் மேற்கொள்ளும் கொள்கைப் பிரச்சாரமும், மற்ற அரசியற் கட்சிகளை அவர்கள் கொச்சைப் படுத்தும் விதமும்தான்.

இவர்கள் அந்த சிங்கள மந்திரியைச் சந்தித்தது சாதனை "மந்திரியிடம் கோரியமை மக்களுக்காகச் செய்த தியாகம்" "மந்திரியைச் சம்மதிக்க வைத்ததில் பெருமை" மந்திரி உறுதி அளித்ததால் புளகாங்கிதம். ஆக மொத்தத்தில் பாண்டிய மன்னனிடம் பரிசைப் பெற்றுக் கொண்டு, வெற்றிகரமாக வீடு திரும்பி, பரிசை மனைவியிடம் கையளித்திருந்தால் மதுரை மாநகரைச் சேர்ந்த தருமி என்ற அந்த வறிய புலவன் எவ்வளவு மகிழ்ந்திருப்பானோ அந்தளவு மகிழ்ச்சி வெள்ளத்தில் தமிழர் கூட்டணியினரும், அவர்களுடன் போன தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவரும் மிதந்தனர்.

ஆனால் இவர்களைப் பொறுத்த வரையில், அந்த சிங்களமந்திரியின் இடத்தில் ஒரு தமிழர் இருந்திருந்தால் அவர் ஒரு துரோகி "அந்தத் தமிழ் மந்திரியைச் சந்திப்பது துரோகத்தனம்" அந்தத் தமிழ் மந்திரி யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு நேர காலத்துக்கு புத்தகங்களை அனுப்பி வைத்தால் அவை மானமுள்ள தமிழினத்துக்குப் போடும் எலும்புத் துண்டுகள்..........

அட என்னங்கடா உங்கடை தமிழுணர்ச்சி !!!!!!!!!!!!!!!!!!

# குசு மசக்கு

★ யாழ்ப்பாணத்து வியாபாரியான பா.உ அவர். அண்மையில் கண்டியில் நடைபெற்ற தேசியக் கட்சியின் மாநாட்டில் மூன்றாவது ஆளாக உரையாற்றியுள்ளார். தேசியத் தலைவராக ஆகுவதற்கு முயற்சிக்கிறார் போலும். வாழ்க தேசியப் பற்று!!!???.

★ புலிகளுக்கு ஆதரவாக பகிரங்கத்தில் பேசுகின்ற அந்தக் கூட்டான கட்சியின் தலைவர் அண்மையில் பத்திரிகையாளர் ஒருவருக்கு தகவல் அளிக்கும் போது அரசாங்கத்தின் பொருளாதாரத் தடைகளை புலிகள் அகற்றக் கோருவது பற்றி அந்தப் பத்திரிகையாளர் அபிப்பிராயம் கேட்டபோது "இந்த அநியாயப்படுவாங்கட பொருளாதாரத் தடை, பாஸ் நடைமுறைகளை நீக்கச்சொல்லி ஆர் அவையிற்றை கேக்கப்போயினம்" என நெஞ்சத்திலிருந்து கோபத்தை வெளியிட்டார். சில செக்கன்களுக்குள்ளேயே வெளியில ஆரிட்டையும் சொல்லிப் போடாதீங்க என்றும் கேட்டுக் கொண்டாராம்.

மாவீரர் பட்டம் வாங்கியவரினுடைய கட்சியின் புதிய தலைவர் அண்மையில் அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் பல முக்கிய பிரமுகர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மத்தியில் நிமலன் செளந்தரநாயகத்தை கொலை செய்தது பட்டம் கொடுத்தவர்கள் தான் என்று தமது தாடியைத் தடவியபடியே அடித்துக் கூறினாராம்.

மூன்று நான்கு நாக்குகளால் பேசுவதற்கு ஒரு போட்டி வைத்தால் இவர்கள் கின்னஸ் சாதனை புரிவார்கள்.

★ மேலுள்ளவர்கள் கவனிக்காத நேரத்தில் குளத்தங்கரைப் பத்திரிகை ஆசிரியர் குழாம் விருந்தபாட்டிற்குக் குறி சுடுவார்களாம். மேலுள்ளவை இடைக்கிடை குட்டுப் போட்டுத்தான் தங்கட வழியில செலுத்துவினமாம்.

★ சரிநிகர் பத்திரிகையின் ஆரம்ப கர்த்தா தமிழ் குறுங்குழுவாத பாசிசம் பற்றி இப்ப அடிக்கடி தெளிவாகத்தான் எழுதுகிறார். அவர் இப்ப வாழுகிற சூழலில அது அவருக்கு வசதியாகத்தான் இருக்கிறது. ஆனால் இங்க இருக்கிற அவரின் சீடர்கள்தான் மாட்டுப்பட்டு போய் நிக்கினமாம்.

பத்திரிகை முழுக்க புலிப் புராணம் பாடாவிட்டால் தலைக்கே ஆபத்து எனத் தவிக்கிறார்கள். பிடித்த வாலை விடமுடியாமல் நிற்கிறார்கள். இவர்களின் மூக்கணாங்கயிறு மகாகவியின் கையிலிருந்து இப்போது மட்டக்களப்பு ராமனிட்மா ? அந்த அவஸ்தையை ஏன் கேட்கிறீர்கள்.

★ வன்னி மக்களின் அமோக ஆதரவுடன் பாராளுமன்றம் சென்ற தன்மானத் தமிழ் பா.உ ஒருவர் ஆறு வருடம் அமெரிக்காவில் வதிவதற்கான விசாவைப் பாவித்து திருச்சியிலிருக்கும் தனது குடும்பத்தை அமெரிக்காவுக்கு நிரந்தரமாக குடியேற்றி விடலாமா என நெருக்கமானவர்களுடன் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறாராம்.

★ படுகொலை செய்யப்பட்ட பா.உ குடும்பத்திற்கு நஷ்டஈடு பெறுவது போன்ற உதவிகளை அப்பகுதியைச் சேர்ந்த மற்றொரு பா.உ.. மௌலானாதான் செய்கிறாராம். கூட்டான விடுதலைக் கட்சியினர் கொல்லப்பட்டவரின் மனைவியை பா.உ ஆக்குமாறு வடக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விடுத்த கோரிக்கையையும் செவிமடுக்கவில்லையாம். கொல்லப்பட்டவர் சூசையப்பரின் கூட்டாளி மட்டுமல்ல நெருங்கிய உறவினருமாவார். இருந்தும் அவரின் மனைவி, பிள்ளைகள் எதிர் நோக்கும் உடனடிப் பிரச்சினைகளுக்கு உதவவுமில்லை, எட்டிப்பார்க்கவுமில்லையாம்.

சூசையப்பரும் வெளிநாட்டுக்குப் போனவர் பல மாதங்களாகுது இன்னமும் திரும்பவில்லை. இந்துப் பதவிக்காலத்தோடு அவரும் குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் அமெரிக்காவிலோ, கனடாவிலோ நிரந்தரமாகக் குடியேறிவிடுவார்கள் என்றே நெருங்கிய வட்டாரங்கள் கருதுகின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "தமிழ் என்பது எங்களுக்கு ஜீவசுவாசம்"

(சென்ற இதழிலின் தொடர்ச்சி)

"நான் முதன்முதலாக ஒரு பெண்ணைக்காதலித்தேன். அவள் இந்தச் சுவிஸ்தேசத்தைச் சேர்ந்தவள். இரண்டு மாதங்கள் எனது அன்பைப் பங்குப் போட்டு, பாசம் காட்டி, இனிய பல புதிய அனுபவங்களைத் தந்து, உலகமே சொர்க்கத்தின் மூலஸ்தானம் என்று உணர்த்தினாள். நான் நினைத்தேன்" வாழ்ந்தால், இறக்கும் வரை இவளுடன்தான், ஏன், இன்னும் ஜென்மங்கள் இருந்தாலும், இவளுடனே வாழவேண்டுமென்று நினைத்தேன்".

ஆனால், அந்த இரண்டு மாதத்தில், அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள், இனிய நண்பனே 'கி', நாங்கள் எமது உறவை இன்றுடன் முடித்துக் கொள்வோம் என்று கூறி, என்னை முத்தமிட்டுச் சென்றாள். ஏன் எங்கே போகின்றாய் என்று கேட்டேன். எனக்கு மார்ஸை நன்றாகப் பிடித்துள்ளது. அவனுடன் வாழப் போகிறேன் என்றாள்.

இந்த நாட்டின் கலாச்சாரம், பழக்கம் என்பதெல்லாம் இதுதான். ஆனால் என்னால்தான், இந்த உடல் பரிசோதனையை, மனநோயாக மாற்றிய விதத்தை ஜீரணிக்க முடியவில்லை. அவள் எனக்கே எனக்காய், என்றும் என் துணைவியாய், அன்பின் ஊற்றாய், குழந்தை பெற்று வாழவேண்டுமென்று நான் கொண்ட ஆசைகளை ஒரு பெரும் அணுகுண்டை அடித்துக் கலைத்தது போல் கழற்றிச் சென்று விட்டாள். எனக்கு காதல் நோய் பிடித்தது. அவளின் நினைவில் உருகிக் கரைந்து கவிதை எழுதி, நான் மாறிப் போனேன். "பெண்ணே! உன்னை நாளை மலரும் பூவாக நினைத்தேன், நீயோ, நேற்று உதிர்ந்த சருகாக ஏன் வீழ்ந்தாய்" என்றெல்லாம் கவிதைகள் எழுதினேன்.

எனது நண்பர்கள், இங்கே இப்படித்தான், ஓடு இன்னொருத்தியைத் தேடு, இன்பம் பெறு, வாழ்க்கையை அனுபவி, உல்லாசம்தான் என்றார்கள். எனக்குத்தான் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என்னை நேசிக்கும், என்றும் எனக்காய் வாழும் ஒருத்தியைத் தேடினேன். அவளும் முன்னவள் போல் மாறிப் போனால், நான் எனது காதலியை, எனது கண்களைப் போலவும், இதயத்தைப் போலவும் தேடுகின்றேன்.

அவர்களோ, ஆண்களை, உறைகளைப் போல் வீசிவிட்டு போகின்றார்கள். இந்த நிலை இந்தச் சுவிஸ் இளைஞர்களுக்கு ஏற்படுவதில்லை. எனக்கு மட்டும் தான் ஏற்பட்டது என்று நினைக்கின்றேன். இப்பொழுது ஒருத்தி என்னுடன் இருக்கின்றாள். அவளுக்கு வயது பதினெட்டு, "இன்னும் ஒருவாரம்தான் இருப்பேன் என்று கூறிவிட்டாள். ஆனால் எனக்கு, ஒருநிரந்தரமான துணைதான் தேவையாக இருக்கின்றது. இதற்கு என்ன காரணம் என்று கூறுவீர்களா செந்தூரன்" என்று கேட்டான்.

"மொழியென்பது நீங்கள் வாழும் சூழலிலிருந்து பெற்றுக் கொண்டது. கலாச்சாரமும், பண்பும் வழிவழியாக, பரம்பரை அணுக்கள் மூலம், உங்களின் ஓடும் இரத்தத்தின் மூலம், உங்களின் மூதாதையர்களின் இயல்பூக்கத்தின் மூலம் கடத்தப்படுவது. உங்களுக்கும் அதுதான் நடந்துள்ளது. இன்று எமது தமிழ்ப் பெண்களும் ஆண்களும், எமது தமிழ் தேசத்தில் எவ்வளவு அழகாகத் தமிழைப் பேசி, கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனுமாக குடும்பம் நடத்துகின்றார்கள் தெரியுமா? நீங்கள் தேடும், ஒருவனுக்கு ஒருத்தி, எனக்கே எனக்காய் எனும் பெண்களை, நீங்கள் தேடவேண்டிய இடம் இதுவல்ல, அது எமது தாயகம். உங்கள் தாத்தாவும், ஆச்சியும் இன்றும்கூட தனிக்குடித்தனம் போல் இனிய வாழ்வு வாழ்கின்றார்களே, அந்த தேசத்துக்கு வாருங்கள். அங்கே உங்களின் அபிலாசைகளை, உங்களின் எண்ணங்களை, உங்களுக்காக, தன்னை உருக்கி, வாழ்க்கை தரும் அன்பு ஜீவன்கள் பலரைச் சந்திக்க முடியும், ஆனால் நீங்கள் முதலில் விரும்பும் பெண்ணே, உங்களின் இறுதிக் காலம் வரை தொடர்ந்து இருப்பார் என்று நான் உறுதியாகக் கூறுவேன். அதனால், எமது கலாச்சார பண்புடன் கூடியது மொழி, எனவே, நீங்கள் உடனடியாக தமிழைக் கற்றுக் கொள்ளுங்கள். எமது தாயகத்திற்கு வாருங்கள். உங்களின் மனம் நிறைந்த வாழ்வு அங்கே காத்திருக்கும்" என்றான் செந்தூரன். "என்னுடைய மனோ நிலைக் காரணத்தை மிக அழகாகக் கூறிய உங்களுக்கு எனது நன்றி, நான் உடனடியாகத் தமிழ் படிக்கப் போகின்றேன் என்றான் கிளரன்.

செந்தூரனுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. தமிழைத் தேடிய தனது பயணத்திற்கு ஒரு வெற்றி என்று நினைத்தான்.

கிளரன் சுவிஸிலிருக்கும் மிகப் பெரிய தமிழ்ப் பாடசாலையில் தமிழ் மாணவனாகச் சேர்ந்துக் கொண்டான். மிக விரைவில் தமிழைக் கற்றுக் கொண்டான்.

அதன் பின்னர், அவன் தமிழில் மிக அழகாக எழுதவும், உரையாடவும் திறமை பெற்றான்.

தனது மொழி தமிழ் என்பதும், அதைத் தன்னால் சரியாகப் பேசவும், எழுதவும் முடியும் என்பதும், அவனுக்கு ஒருவித ஆத்ம பலத்தைக் கொடுத்தது. அவனுடைய நடை பொலிவு பெற்றது. அவனுக்கு நிறைந்த வாழ்வு, அந்த நாட்களாய்க் கடந்தது.

தனது உறவுகள் வாழும் டென்மார்க், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குச் சென்றான். அங்கே அவன் கழித்த நாட்கள் எல்லாம் மிகவும் இனிய கணங்களாகக் கழிந்ததாக அவன் நினைத்துப் பார்த்தான். இந்த அந்நிய தேசத்திலேயே தமிழுடனான உறவு இத்தனை இன்பத்தைக் கொடுத்தால், எமது சொந்த மண், தாத்தா வாழும் மண்ணில் எத்தனை இன்பமாக இருக்க வேண்டுமென்று நினைத்துப் பாாத்தான். அவனுக்குள் தீர்க்கமான முடிவு தோன்றியது.

பலாலி விமான நிலையத்தில் தாத்தா, ஆச்சி, அவர்களின் உறவினர்கள் இல்லை. கிளரனின் உறவுகள் அவனை, மலர் மாலைகளைப் போட்டு வரவேற்றபோது, இனம்புரியாத தேவலோக மகிழ்ச்சி மனமெல்லால் அவனுக்குள் உறைந்து நின்றது.

கிளரன், மிகப் பெரிய வைத்திய சாலையை தமிழ் தேசத்தின் உச்சியில் கட்டினான். அவனுடைய சேவை, அந்தத் தமிழ் தேசத்துக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

கிளரன், விரும்பியபடி தூய அன்பு காட்டும் பெண், ஆளை அடிக்கடி மாற்றாத பெண் அவனுக்கு மனைவியானாள்.

அவனை இத்தனை தூரம் மாற்றிய செந்தூரன், கிளரனின் இதயத்திலல்ல, இமயத்தின் இதயத்திலேயே வீற்றிருக்கும், கடவுளைப் போல் உயர்ந்து நின்றான்.

கிளரன், இனிமேல் சுவிற்சர்லாந்துக்கு உல்லாசப் பயணியாக மட்டுமே வந்து போவான்.

**(சுவிஸ்ஸிருந்து கல்லாறு சதீஸ் எழுதிய பனிப்பாறைகளும் சுடுகின்றன. என்னும் தொகுப்பிலிருந்து) [illegible]**

# தலைமறைவு வாழ்க்கை இரு சமூகங்களிடையே தொடர்ந்து விரிசலை அதிகரிக்கும்



மலையகத்தில் தோற்றுவிக்கப்பட்ட இன வன்முறையானது இரு சமூகங்களிடையே பெரிய இடைவெளியைத் தோற்றுவித்துள்ளது. அங்கு நடந்த அசம்பாவிதங்களின் போது பெரும்பாலும் தமிழ் மக்களுக்கே பெரும் சொத்து இழப்புக்கள் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கலவரங்கள் நடந்த பகுதிகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரது வீடுகள் சேதத்துக்குள்ளாக்கப்பட்டாலும் தங்களுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டு விட்டதாகவே பேரினவாதிகள் கணக்குக் காட்டினார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதே உண்மை. சேதத்துக்குள்ளாகும் முன்பதாகவே அவர்கள் தங்களிடமுள்ள பெறுமதியான பொருட்களை எடுத்துச் சென்றுவிட்டதுவுமல்லாமல் தமிழர்கள் தாக்கினார்கள் என்ற காரணத்தைக் வெளிக்காட்டுவதற்காக பாதிக்கப்படாதவர்கள் எல்லோரும் அகதிகளாக தங்களை இனங்காட்டி தொடர்ந்து மலையகத்தில் ஒரு இராணுவமுகாம் அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

இதுவரை இந்தக் வன்முறைகளினால் உயிரிழந்த தோட்டத் தொழிலாளர் குடும்பத்தினருக்கு எந்தவிதமான நஷ்ட ஈடும், நியாயமான, நீதியான விசாரணையோ நடைபெறாதது பாரபட்சமானதும், துக்கரமானதுமான நடவடிக்கையாகும். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாம் என சம்பந்தப்பட்டவர்கள் எண்ணுவார்களானால் மேலும் மேலும் இனங்களுக்கிடையிலான நட்புறவு ஏற்படுவது சந்கேத்திற்கிடமானது.

திரு பெ. சந்திரசேகரன் பா.உ கலவரத்திற்கு காரணமாக இருந்தார் என்று கூறி கைது செய்து விடுதலை செய்தனர். பதிலாக பல அப்பாவி இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும், விடுதலையானவர்கள் நிபந்தனையோடும், பிணையிலும் விடுதலை செய்யப்பட்டிருப்பதும் அவர்கள் தொடர்ந்து சிறைவாழ்க்கை வாழ்வதாகவே கருத வேண்டியுள்ளது.

மேலும் பலரை பழிவாங்குவதற்காகவே கைது செய்ய முயற்சிப்பதும் தொடர்ந்தும் இளைஞர்கள் தவறான வழிகளில் செல்ல அனுமதி வழங்கியதாகவே கொள்ள வேண்டும். அதனால் அவர்கள் கைதுகளுக்கு அஞ்சி தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்வதானது இந்நாட்டில் கையாளப்படும் சட்டநடவடிக்கையின் மீதான நம்பிக்கையின்மையை தெளிவுபடுத்துகிறது. தலவாக்கொல்லை பகுதிகளில் தமிழ் மக்களின் சொத்துக்களுக்கும் உயிரிழப்புக்களுக்கும் காரணமாயிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பேரினவாத சக்திகள் இன்னமும் நகரில் சுதந்திரமாக நடமாடும் போது எந்தவித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் எதிர்காலத்தில் இந் நாட்டின் சட்டங்கள் நேர்மையாக இயங்குமா என்பது கேள்விக்குரிய விடயமாகும். •



# கிரிக்கெட் சூதா........

09ம் பக்க தொடர்ச்சி

உலக சாதனை புரிந்தவர்கள். அத்தகையவர்களே இன்று 5-0 என்று தோல்வியுறும் நிலைக்கு வந்திருப்பது பரிதாபத்திற்குரியதே. அவுஸ்திரேலிய அணி இன்று சர்வதேச ரீதியில் டெஸ்ட் போட்டிகள் விளையாடும் நாடுகளில் முதலாவது இடத்தைப் பிடித்து முடிசூடா மன்னர்களாகத் திகழ்கின்றார்கள்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இலங்கை அணி தனது முதலாவது டெஸ்ட் போட்டியினை ஆரம்பித்துள்ளது. ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட முதல் இரண்டு போட்டிகளிலும் இலங்கை தோல்வி அடைந்தது. தென்னாபிரிக்காவிலுள்ள விளையாட்டு மைதானத் தளங்கள் வேகமானவை. பந்து வீச்சுக்கள் மிக வேகமாகவும் அதிகளவில் உயர்ந்தும் வரக்கூடியவை இத்தகைய சந்தர்ப்பங்களில் தென்னாபிரிக்கா அணியைச் சார்ந்த அலன் டொனால்ட், பொலொக், டெலிமாக்கஸ், நிட்டினி போன்ற வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளிப்பதற்கு இலங்கை அணியில் உள்ள துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் சிரமப்படுவார்கள்.

சனத் ஜெயசூரியா, அத்தபத்து, ஜெயவர்த்தனா, ஆர்னல்ட், சங்ககார போன்றவர்கள் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களை எவ்வாறு திறமையாக எதிர்த்து ஆடுவார்கள் [illegible]கள் தென்படுகின்றன. இலங்கைத் தேர்வுக்குழு அரவிந்த டி சில்வாவை இத் தொடரிற்கு தேர்வு செய்யாமை மன்னிக்க முடியாத தவறாகும். அரவிந்தா வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்த்து ஆடுவதில் அனுபமிக்கவர். அரவிந்தா இல்லாத இலங்கை அணி தென்னாபிரிக்காவில் வெற்றிவாகை சூடுவது மிகுந்த சிரமமே.

இந்நிலையில் இலங்கை அணியின் நம்பிக்கை ஒளியான முத்தையா முரளிதரன் தனது தனித் திறமையால் இலங்கையின் வெற்றிக்கு வழிவகுக்க கூடும். முரளி ஆகக் குறைந்த டெஸ்ட் போட்டிகளில் 300 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனையை முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தற்போதுள்ள நிலைமைகளை கருத்திற் கொண்டு சர்வதேச ரீதியில் மிகத் திறமையான வீரர்களை கொண்ட ஓர் அணியைக் கற்பனையில் உருவாக்குவதானால் யார் யார் இடம் பெறுவார்கள் என்பதில் கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் எதிர்ப்பார்ப்புக்கள் இருக்கலாம் நாம் இங்கு தரும் அணியில் இடம் பெறுவோர் கடந்த இரு வருடங்களில் தமது திறமையை சர்வதேச அளவில் வெளிப்படுத்தியவர்கள். இவர்கள் துடுப்பாட்ட ஒழுங்கில் தரப்பட்டுள்ளார்கள். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னாமல் முழங்காமல் நடந்த வன்னி விஜயமும், நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு தயார்

நோர்வே அரசின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹேய்மின் வன்னி விஜயத்தின் பின் இலங்கை தொடர்பாக பத்திரிகை உலகமும், அரசியல் உலகமும் பரபரப்படைந்தது. மின்னாமல் முழங்காமல் நடந்த வன்னி விஜயமும், "நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு தயார்" என பிரபாகரன் அவரிடம் தெரிவித்திருந்ததாக அவர் தெரிவித்ததே பரபரப்புக்கு காரணமாகும். "என்னவோ நடக்குது மர்மமாயிருக்குது" என்ற ஆர்வ வேட்கையினால் எல்லோரும் தூண்டப்பட்டவர்களாய் இருந்தார்கள்.



## "என்னவோ நடக்குது மர்மமாயிருக்குது"

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய அதிகாரப்பகிர்வுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கும் என்று நோர்வேயின் விசேட தூதுவர் பிரபாகரனுக்கும் தெரிவித்திருந்தார். தான் பேசிய விடயங்களை ஜனாதிபதிக்கும், 'எதிர்க்கட்சித் தலைவருக்கும் எடுத்துரைத்தார்.

அவருடைய வன்னி விஜயம் கூட முறைப்படி அரசுக்குத் தெரிவித்து அரசின் உதவியுடன்தான் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவோ தனக்கு ஒன்றும் தெரியாது என விசனம் தெரிவித்தார்.

## சோல்ஹெய்மின் கொடும்பாவியை எரித்தார்கள்.

சிஹல உறுமயக் காரர்கள் சோல்ஹெய்மின் கொடும்பாவியை எரித்தார்கள். ஜே.வி.பி இதனை ஏகாதிபத்திய சதி எனவும், நோர்வேக்குப்பின்னால். அமெரிக்கா ஏகாதிபத்தியமும், மேற்குலகமும் நிற்கின்றன. அவற்றின் ஆயுதவியாபார நோக்கங்களுக்கே இலங்கை களமாகிறது எனவும், நோர்வேக்காரர் புலிகளின் ஆதரவாளர்கள் எனவும், சோல்ஹெய்ம் புலிகளுக்கு ஆதரவான கட்சியைச் சேர்ந்தவர் எனவும் குற்றஞ் சாட்டியது.

இவர்கள் எல்லோருமே பிரிவினை பற்றிக் கவலை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். பிரிவினைக்கோரிக்கைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

## தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படவேண்டும்

ஆனால் தமிழ்மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சினைகள் உண்டு என்றோ, அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்றோ ஒத்துக்கொள்வதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான எந்த முயற்சியும் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பதே இவர்களின் கருத்து நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி அவர்கள் தனது அரசின் தீர்வு யோசனைகளை பாராளுமன்றத்தில் பிரேரித்து உரையாற்றிய போது பாராளுமன்றத்தின் உள்ளும், வெளியிலும் நடந்த எதிர்ப்புக்களும், ஆர்ப்பாட்டங்களும். இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல் இருக்கிறதா என்ற கேள்வியை தீவிரமாக எழுப்பியிருந்தன.

## புலிகள் ஜனநாயக விரோத படுகொலைகளையும் நிறுத்த வேண்டும்.

மறுபுறம் யுத்தத்தையும், ஜனநாயக விரோத படுகொலைகளையும் மாத்திரம் சார்ந்து இயங்கும் அமைப்பாகவே புலிகள் இயக்கம் செயற்படுகிறது. சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் சீர்குலைவுகள் பற்றியோ அல்லது மீள்புனரமைக்க முடியாத வாழ்விட மற்றும் சமூகப்பேரழிவு பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை.




அரச கட்டுப்பாட்டில் இல்லாத வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் யாழ் குடாநாட்டிலும் வாழும் மக்கள் மூடப்பட்ட நிலையிலேயே சீவிக்கின்றார்கள். வெளியுலகத் தொடர்பு அவர்களுக்கு மிகக்கடினமான ஒன்றாக இருக்கிறது. நாளாந்த மரணங்கள் முன்னெப்போதையும் விட அதிகரித்துள்ளன.

## சுகாதாரமின்மையாலும் மரணிப்பவர்களின் தொகை அதிகமாகியுள்ளது.

யுத்தத்திற்கு நேரடியாக பலியாகிறவர்களும், பக்கவிளைவான அகதி வாழ்க்கை மற்றும் போசாக்கின்மையாலும், சுகாதாரமின்மையாலும் மரணிப்பவர்களின் தொகை அதிகமாகியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அல்லது அரசின் கட்டுப்பாட்டுப் பகுதி

என்று அழைக்கப்படும் மூடுண்ட இடங்களில் சீவிக்கும் மக்கள் துப்பாக்கிகள், பீரங்கிகள், குண்டுவீச்சு விமானங்களுக்கு மத்தியில் வாழ்வது மட்டுமல்லாது அப்பகுதிகளை ஆளுபவர்களின்-வழிநடத்துபவர்களின் ஈவிரக்கமற்ற யுத்த இயல்பினாலும், ஜனநாய விரோத, மனித உரிமைகளை காலடியில் போட்டு துவம்சம் செய்யும் குணங்களினாலும் மனித வாழ்வு அங்கு பீதியில் உறைய வைக்கப்பட்டிருக்கிறது.

## மனிதர்கள் சமாதானம் வராதா என ஏங்குவது இயல்பானதே.

இத்தகைய சூழ்நிலையில் வாழும் மனிதர்கள் சமாதானம் வராதா என ஏங்குவது இயல்பானதே. இந்த சமாதானத்திற்கான ஏக்கம் பல்வேறு காலகட்டங்களில் மக்களால் பெரும் ஆர்வத்துடன் வெளிப்படுத்தப்பட்டது. 1987ல் இந்திய அமைதிகாப்பு படை காலடி வைத்த போதும், 1995ல் பொதுஜன முன்னணி அரசு பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்ட போதும் மக்கள் தமது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

துரதிஷ்ட வசமாக இங்கு மக்களின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை. மாறாக உதாசீனம் செய்யப்பட்டன.

சோல்ஹெய்மின் செய்தியின் பின் இங்கு மீண்டும் நம்பிக்கைகள் துளிர் விட்டன.

## நோர்வேயின் முயற்சிக்கு தத்தமது ஆதரவை ஊர்ஜிதம் செய்தார்கள்.

சோல்ஹெய்ம் வந்து சென்ற கையோடு இலங்கை வந்த பிரிட்டனின் வெளிவிவகார துணை அமைச்சர் பீற்றர் ஹெய்னும், அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான ஆலோசகர் கார்ல் இன்டர்பேர்த்தும் நோர்வேயின் முயற்சிக்கு தத்தமது ஆதரவை ஊர்ஜிதம் செய்தார்கள்.

பிரித்தானிய வெளியுறவு துணை அமைச்சர் பீற்றர் ஹெய்ன் ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். தென்னாபிரிக்க இன ஒதுக்கலுக்கெதிராக போராடிய அவர் வடஅயர்லாந்து பிரச்சினையைத் தீர்ப்பதில் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், எதிர்நோக்கிய தடைகளை எவ்வாறு களைந்து முன்னேறினார்கள் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

[illegible]



ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதையே அவரது உரை முதன்மைப்படுத்தி இருந்தது.

## நவம்பர் 26ம் திகதி தனது பிறந்த தின உரையில் பிரபாகரன் என்ன கூறப்போகிறார் என்பதையேயாகும்.

சோல்ஹெய்ம் வன்னி விஜயத்தின் பின்னர் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது. நவம்பர் 26ம் திகதி தனது பிறந்த தின உரையில் பிரபாகரன் என்ன கூறப்போகிறார் என்பதையேயாகும்.

அந்த உரையில் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயார். ஆனால் நீண்ட காலமாக போரிட்டுக்கொண்டு சந்தேகங்கள் அவநம்பிக்கைகளுடன் இருந்த இருதரப்பினருடனும் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிட்டார். அதில் வன்னிக்கான பொருளாதார தடைநீக்கம், இராணுவம் முகாம்களுக்குள் திரும்பிச் செல்வது என்பனவும் அடக்கப்பட்டன.

## வன்னிப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு தயார் என அறிவிப்பு.

இதனைத்தான் சோல்ஹெய்ம் அவர்கள் வன்னி சென்று திரும்பிய பின் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என பத்திரிகைகளுக்கு கூறிய வேளையிலும் புலிகளின் லண்டன் அலுவலகம் இந்த நிபந்தனைகளை வெளியிட்டிருந்தது.

மறுபுறம் பிரபாகரனின் உரையில் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றும் "திடசங்கற்பம்" போர் பிரகடனமாம் ஆவேசமாகவும் வெளிப்பட்டது.

அரசு தரப்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அவர்களும் போர் முழக்கக் கருத்துக்களையே அடிக்கடி வெளியிட்டு வருகிறார்.

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அவர்களும் போர் முழக்கக்கருத்துக்களை அடிக்கடி வெளியிடுகிறார்.

தாம் அரைப்பிறை வடிவில் யாழ்ப்பாணத்தைச் சுற்றி வளைத்து நின்றபோது பலாலி இராணுவத்தளத்தில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்த போது யாழ்ப்பாணத்தில் அகப்பட்டிருந்த 50ஆயிரம் துருப்பினரையும் பாதுகாப்பதற்கு சர்வதேச சமூகம் உதவியது. என்று தனது உரையில் ஆதங்கப்பட்டிருந்தார்.

உலகம் இவ்வாறு நடந்துகொண்டதற்கு தன் பக்கத்தில் உள்ள தவறுகள் என்ன என்பதையும் பிரபாகரன் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

சர்வதேச சமூகம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இருந்த காலமும் இருந்தது. அந்த ஆதரவுக்கு இந்தியாவின் பெரும்பங்களிப்பும் காரணமாக இருந்தது.

ஆனால் இந்தியாவை விரோதித்துக் கொண்டதன் யதார்த்தமான விளைவுகளைப் பிரபாகரன் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இந்தியாவை மேவி இந்தப் பிராந்தியத்தில் யாராலும் எந்தக்காரியமும் இடம்பெற மாட்டா என்பதே அது.

## ஈழத்தமிழர் பிரச்சினையில் கடந்த 20வருடங்களாக இந்தியா தொடர்பு பட்டு வருகிறது.

ஈழத்தமிழர் பிரச்சினையில் கடந்த 20வருடங்களாக இந்தியா தொடர்பு பட்டு வருகிறது. போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியதிலிருந்து ஒரு நியாயமான குறைந்த பட்சத் தீர்வைக் கொண்டு வந்து அமுல்படுத்த முயற்சித்த வரை இந்தியா பங்களித்திருக்கிறது. ஒன்றரை லட்சத்திற்கு மேல் இன்னமும் ஈழத்தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக இருக்கிறார்கள் இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவம் இங்கு புரிந்து கொள்ளப்படவில்லையென்றால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதுவும் புரிந்து கொள்ளப்பட முடியாத ஒன்றாகவே இருக்கும்.

நோர்வேக்கோ, மேற்கு ஐரோப்பியர்களுக்கோ, அமெரிக்காவுக்கோ இந்த யதார்த்தம் புரியாததொன்றல்ல.

ஆனால் இலங்கையில் உள்ள தமிழர் தரப்பினரில் சிலர் உபகண்டத்தை கடந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என மனப்பால் குடிக்கிறார்கள். நோர்வேயோ தனது முயற்சிகள் தொடர்பாக அவ்வப்போது இந்தியாவுக்கு அறிவிக்கிறது: இலங்கை அரசும் அவ்வாறுதான் நடந்து கொள்கிறது.

(தொடர்ச்சி 7பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னாமல் முழங்காமல்......

06ம் பக்க தொடர்ச்சி



சேர்பியர்களுக்கும், கோசோவாவுக்கும் இடையே யுத்தம் நடைபெற்ற போதும் மேற்குலகில் வாழும் தமிழர்களின் ஒரு பகுதியினர் நேட்டோ அப்பிரச்சினையில் தலையிட்டது போல் எமது பிரச்சினையிலும் தலையிடவேண்டும் என்று புலி சார்புத் தமிழர்கள் சிலர் உலகத்தமிழர் பேரவை என ஒரு கூட்டத்தை கனடாவில் நடாத்தி உரையாற்றினார்கள் குரல் கொடுத்தனர்.

## இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் ஈழத்தமிழர் பிரச்சினையானது சர்வதேச முக்கியத்துவத்தை இழந்திருந்தது.

இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஈழத்தமிழர் பிரச்சினையானது சர்வதேச முக்கியத்துவத்தை இழந்திருந்தது. அப்போது கலாநிதி நீலன்திருச்செல்வம் போன்றோர். கோசோவா, பொஸ்னியா, பலஸ்தீனம் ஆகியன போன்று ஈழத் தமிழர் பிரச்சினை முக்கியத்துவம் பெறாததற்கு மேற்குலகின் அக்கறைக்கு உள்ளாகாததற்கான நிலைமைகளைச் சுட்டிக்காட்டினர்.

ஸ்லாவியர்களின் ஆதிக்கம் தொடர்பான பிரச்சினையும், மத்திய கிழக்கில் எண்ணெய்வளங்களின் மீதான முஸ்லீம்களின் மேலாண்மை என்ற யதார்த்தமும் மேற்குலகின் பிரச்சினைகளாக இருந்தன.

தற்போது இந்தியாவும், பாகிஸ்தானும் அணுவாயுத வல்லரசுகளாக தென்னாசியாவில் உருவாகியிருப்பதும் மேற்கு உலகத்தவர்களின் கவனம் இங்கு திரும்பியிருப்பதற்கு ஒரு காரணமாய் இருக்கக்கூடும்.

## பிரபாகரன் தனது உரையை வரலாற்றுணர்வுடன் ஆற்றியிருப்பதாகத் தெரியவில்லை.

பிரபாகரன் தனது உரையை வரலாற்றுணர்வுடன் ஆற்றியிருப்பதாகத் தெரியவில்லை. அவருடைய உரை பெருமளவிற்கு சந்திரிகா அவர்களின் நவம்பர் ஒன்பது உரைக்கு பதிலளிப்பதாகவும் பொதுஜன முன்னணி அரசு மீதான தமது கண்டன மற்றும் விமர்சன பிரச்சாரமாக மட்டுமே இருந்தது.

ஐ.தே.க. பற்றியோ அதற்கு முன்னான 17வருடங்கள் பற்றியோ எதையும் குறிப்பிடவில்லை.

மேற்குலகை புகழ்வதில் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார். பௌத்த சிங்கள பேரினவாதத்தின் செயற்பாடுகளை மறைத்து ஆங்கில காலனி ஆதிக்க வாதிகளின் மீது பழியைப் போடுவதாக சந்திரிகாவின் நவம்பர் ஒன்பதாம் திகதி உரை அமைந்திருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடிய வல்லமை மேற்குலகிடம் இருப்பதாக கருதியிருக்கலாம். அரசுக்கு மாத்திரமல்ல புலிகளுக்கும் யுத்தத்தை நடத்துவதற்கான பண பொருளாதார உதவிகள் மேற்குலகிலிருந்தே கிடைக்கின்றன. புலிகளின் பிரதான பிரச்சார தளமும் மேற்கை மையமாகக் கொண்டே உள்ளன.

மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் ஒரு கணிசமான பகுதியினர் மத்தியில் இந்த யுத்தம் தொடர்வதில் பெருவிருப்பு உண்டு. அது அவர்களின் சுயஇருப்புத்தொடர்பான எண்ணத்தின் வெளிப்பாடே.

## "பேச்சுவார்த்தைகள் வேண்டாம்" "விடுதலைப்போராளிகளை பலப்படுத்துங்கள்"

'பேச்சுவார்த்தைகள் வேண்டாம்' 'விடுதலைப்போராளிகளை பலப்படுத்துங்கள்' என்ற கோரிக்கை இவர்களில் ஒரு பகுதியினரிடமிருந்து விடுக்கப்படுகின்றது.

போரில் நேரடியாக சம்பந்தப்படாத இந்தப் பிரிவினர் இந்த நாட்டில் வறுமையில் உழலும் குடும்பங்களின் இளைஞர்களையும், பெண்களையும், சிறுவர் சிறுமியரையும் போராடுமாறு கூறுகிறார்கள். இது மத்திய காலத்தில் அடிமைகளை கொடிய விலங்குகளுடன் சண்டையிட வைத்து தமது குரூர மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது போன்ற ஈனச்செயலே ஆகும்.

## இளைஞர்களையும், பெண்களையும், சிறுவர் சிறுமியரையும் போராடுமாறு கூறுகிறார்கள்.

போரின் நிழலிலும், போரினுள்ளும் வாழும் மக்கள் தான் அதன் பேரனர்த்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படும் சிறு நம்பிக்கை கூட பரவசத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது. நோர்வேயின் முயற்சி தமிழ்மக்களுக்கு நல்வாழ்வை மீட்டுத் தர வேண்டுமென்பதே எமது இதயபூர்வமான விருப்பம்.

அதற்காக நடைபெறவேண்டியவை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரப்பகிர்வு, அச்சம் இன்றி வாழும் சூழ்நிலை, சமாதானம், சகோதரத்துவம், ஜனநாயகம், மனித உரிமைகள் மதிக்கப்படும் நிலை ஆகியனவே.

## மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டவர்களைக் கொன்றொழிக்கும் போக்கை புலிகள் நிறுத்த வேண்டும்.

மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டவர்களைக் கொன்றொழிக்கும் போக்கு நிறுத்தப்படுவது எமது சமூகத்தை பீடித்திருக்கும் நோயின் பெரும்பகுதியை முடிவுக்கு கொண்டுவரும். எனவே குரூரம் நிறைந்த படுகொலைகளை முடிவுக்கு கொண்டுவருவதும் நோர்வேயின் முயற்சிகளில் ஒரு அம்சமாக இருக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்ந்தளிப்பில் தென்னாசியாவில் முன்மாதிரிகளை உருவாக்கியிருக்கும் இந்தியாவின் பங்களிப்பைப் பெற சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அந்தப் பங்களிப்பு பெறப்படாத வரை இங்கு அரசியற் தீர்வு சாத்தியம் இல்லை என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

## புலிகளுக்கு ஐஸ் வைப்பதில் எப்போதும் அக்கறை செலுத்தி வரும் சில. தமிழ் பத்திரிகைகள்.

புலிகளுக்கு ஐஸ் வைப்பதில் எப்போதும் அக்கறை செலுத்தி வரும் சில தமிழ் பத்திரிகைகள் அண்மைக்காலமாக இந்திய விரோத பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இது ஒன்றும் தற்செயலான விடயமாகத் தெரியவில்லை-உயர் மட்டக் கட்டளைப் பிரகாரம் காலம் அறிந்து செய்கின்ற கைங்கரியம் என்றே எண்ணத்தோன்றுகிறது.

மேற்கத்திய நாடுகளின் தலையீட்டை வரவேற்கும் இவர்கள் இந்திய விரோத விஷம் கக்குகிறார்கள்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவிற்கு ஏற்பட்ட கசப்புணர்வுகளுக்கு ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினரே பொறுப்பேற்க வேண்டும்.

இந்தியாவுக்கும் இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளுக்கும் எதிராக புலிகள் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவுடன் சேர்ந்து கொண்டு இலங்கையில் இருந்து இந்தியாவை அவமானப்படுத்தி வெளியேற்றியமையை ஒரு தசாப்தத்திற்குள் இந்தியா மறந்திருக்க முடியாது.

இந்தியாவுடன் ஏற்பட்டிருக்கும் முரண்பாட்டை நீக்குவதற்கான முயற்சி ஈழத்தமிழர் தரப்பிலிருந்தே முன்னெடுக்கப்படவேண்டும்.

வெறும் வாய்வீறாப்புகளை விட ஒரு செயல் முறை முயற்சி அவசியமானது.

இந்தியாவுக்கு எதிராகத் தோள் தட்டுபவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் எந்த அடிப்படையும் அற்றவை.

இந்தியா நிலைநிறுத்த முற்பட்ட அரசியற் தீர்வு ஆதரிக்கப்பட்டிருக்குமானால் அதன் பின்னான நாட்களில் இந்த நாடும் மக்களும் குறிப்பாக தமிழர்கள் சந்தித்திருக்கும் கற்பனை செய்ய முடியாத பேரழிவுகள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையேயான நட்பு நிலை நீடித்திருக்கும்.

## இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையேயான நட்பு நிலை நீடித்திருக்கும்.

தற்போதைய சமாதான முயற்சிகளிலும் இந்தியாவின் பங்களிப்பு தாக்கமானதாக இருக்க வேண்டும் என்பதில் தமிழர்கள் அக்கறை காட்ட வேண்டும். அந்த பங்களிப்பு பெறப்படாத வரை சகல முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

பேச்சுவார்த்தைகளின் கடந்த கால அனுபவங்கள் கருத்திற்கெடுக்கப்படவேண்டும் என்பதைப்போல அதன் கடந்த காலப் பங்காளர்களும் கருத்திற்கெடுக்கப்படவேண்டும்.

புலிகள், அரசு, நோர்வே என்ற முத்தரப்பு என்று மட்டுப்படுத்திக் கொள்ளாமல் சமாதானத்தை நிலைநாட்ட அவசியமான சகல பிரிவினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அப்போதுதான் இப்பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதும், தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாகவும், சகல இன மக்களினதும் நம்பிக்கையைப் பெறக்கூடியதுவுமான இலக்கை அடைய முடியும்.

# காஷ்மீர் பிரிவினை........ 01ம் பக்க தொடர்ச்சி

இன்னும் சில வருடங்களுக்கு முன்னர் மும்பாயில் தாவூத் இப்ராகிம் போன்ற பூாதாள உலக தாதாக்களை வைத்து பல தொடர்மாடிக் கட்டிடங்கள், வர்த்தக நிலையங்கள் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகின. பல நூற்றுக்கணக்கான மக்கள் பலியானார்கள்.



இந்தியாவின் எல்லையில் நின்ற பயங்கரவாதம் தற்போது டெல்லியின் சரித்திரப் பிரசித்திப் பெற்ற செங்கோட்டையில் தாக்கியுள்ளது.

அணுவாயுதத்தை வைத்திருக்கும் ஜனநாயக அரசு அல்லாத உலகப் பொறுப்புணர்வற்ற நாடு என்ற வகையில் பாகிஸ்தானிடமிருக்கும் அணு வாயுதங்கள் பற்றியும் யாரும் அலட்சியமாக இருந்துவிட முடியாது. இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் இது பற்றி நியாயமாகவே கவலை கொள்ள வேண்டியுள்ளது.

வாஜ்பாய் அரசு பதவி ஏற்றபின் பாகிஸ்தானுக்கும், காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் வெவ்வேறு சமயங்களில் நல்லெண்ண சமிக்ஞைகளை வெளியிட்ட போதும் அவை பாகிஸ்தானால் அலட்சியப்படுத்தப்பட்டே வருகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வாஜ்பாய் அவர்கள் லாகூருக்கு மேற்கொண்ட பஸ் பயணமும் புனித ரம்ழானையொட்டி கடந்த மாதம் முதல் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தமும் நல்லெண்ண சமிக்ஞைகளே. ஆனால் பாகிஸ்தானோ, காஷ்மீரின் பிரிவினைவாதிகளினூடாக மேற்கொண்டு வரும் பயங்கரவாதத்தைக் கைவிடுவதாக இல்லை.

இலங்கையினுள்ளும் பாகிஸ்தானின் உளவுத் துறையினரின் ஊடுருவல் பல்வேறு தளங்களில் நிகழ்ந்துள்ளதாக உணர முடிகின்றது.

இந்திய விரோத எழுத்துக்கள் இங்குள்ள பத்திரிகைகளில் திடீரென்று அதிகரித்திருப்பது ஒன்றும் தற்செயலான விடயமல்ல.

ஆயுத தளபாட பரிமாற்றங்களில் ஈடுபடும் தரகு வியாபாரிகளிற் பலரும் பாகிஸ்தானின் உளவாளிகளாகச் செயற்படும் சந்தர்ப்பங்களையும் மறுப்பதற்கில்லை.

பாகிஸ்தானின் இப்போதைய ஒரே நோக்கம் இந்தியாவின் சமூக, பொருளாதார, முரண்பாடுகளை பாவித்து இந்தியாவைச் சீகுலைப்பதே.

இந்தப் பிராந்தியத்திலுள்ள ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற வகையில் இந்தியாவின் பாதுகாப்பு இப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுக்கும் அக்கறைக்குரியதாகும்.

சில வருடங்களுக்கு முன்னர் பஞ்சாபில் பாகிஸ்தானின் தூண்டுதலில் கிளறிவிடப்பட்ட மத விரோத உணர்வுகள் இஸ்லாமிய அடிப்படைவாத விஸ்தரிப்பை மாத்திரம் நோக்கமாகக் கொண்டதல்ல. இந்தியாவைச் சின்னாபின்னப் படுத்துவதற்கான வாய்ப்புக்களில் ஒன்றாகவே அது நடைபெற்றது.

எனவே இலங்கையில் ஏற்பட்டுள்ள திடீர் இந்திய எதிர்ப்பு எழுத்துக்களில் பாகிஸ்தானின் மறை கரங்கள் இருக்கின்றனவா என்பது முன்னெச்சரிக்கை கொள்வதில் தவறேதுமில்லை.

# தலைமைகளின்...... 12ம் பக்க தொடர்ச்சி

மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் கல்வியறிவு மிகக்குறைவாக இருக்கின்றமையும் இதற்குக் காரணமாகும். தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களைப் பற்றியோ அல்லது தொழிற்சங்கங்களிலுள்ள தங்கள் பிரதிநிதிகள் பற்றியோ போதிய புரிதல் உள்ளவர்களாக இல்லை.

அவ்வப்போது தங்கள் பிரதிநிதிகள்-தலைவர்கள் உணர்ச்சிவசமாகப் பேசுவதைக் கேட்டுவிட்டு கை தட்டுவதைத் தவிர வேறெதனையும் அறிந்து கொள்ளும் ஆற்றலை இன்னமும் மலையகத் தொழிலாளர் பெறாமையால் அது இந்த போலித் தலைவர்களுக்கு இன்னமும் வசதியாக உள்ளது.

தொழிற்சங்கமானது தொழிலாளர்களின் நிறுவனம் அவர்களின் சொத்து.

பிரதிநிதிகள் விடும் தவறுகளைத் தொழிலாளர்கள் தட்டிக் கேட்கும் நிலை வரவேண்டும்.

தொழிலாளர்கள் ஒன்றிணைந்து தீர்வுகாணக் கூடிய வகையில் தொழிற்சங்கங்களில் உட்கட்சி ஜனநாயகம் வளரவேண்டும்.

சிறு சிறு பிணக்குகளுக்காகப் பிளவுபடுதல் என்னும் நிலை மாற வேண்டும்.

ஒரு கட்சி ஜனநாயகமுள்ள தொழிற்சங்கங்களையே தொழிலாளர்கள் பலப்படுத்துதல் வேண்டும். எவரும் நினைத்த மாத்திரத்தில் தொழிற்சங்கம் அமைக்கலாம் என்ற கலாச்சாரத்தைத் தொழிலாளர்கள் வளரவிடக் கூடாது.

அரசியல் நீரோட்டத்தில் பங்கு கொண்ட தொழிற்சங்க அரசியல் கட்சிகள் தேசிய கட்சிகளுடன் இணைந்து தங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முயற்சிகளைச் செய்ததன் மூலம் மேலும் சில உறுப்பினர்களை பதுளை, கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட முடியாமல் போனமையானது தொழிலாளர்களிடையே ஐக்கியமின்மையையும், பலகூறுகளாக பிரிந்து செயற்பட்டமையையும் தெளிவுபடுத்துகிறது.

தொழிலாளர்களின் சக்தியானது கட்சி, தொழிற்சங்கங்கள் என்ற பேதமின்றி பிரதிநிதிகளை தெரிவு செய்யும் மலையகத் தொழிற் சங்கங்கள் முற்பட்டிருப்பார்களேயானால் பிரதிநிதிகள் நிச்சயம் மேலும் பலர் எல்லா மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள்.

மலையக மக்களின் இழிவான இன்றைய நிலையையும், மலையகத் தொழிலாளர்களின் உண்மையான சக்தியையும், மலையக மக்களின் எதிர்காலத்தையும் சரியாக உணர்ந்து செயற்படும் நிலைமைக்கு மலையகத் தலைவர்கள் முன்வருவார்களா?

அல்லது மலையக மக்கள் தங்கள் வாக்குப்பலத்தாலும், தாங்கள் தொழிலாளர்கள் என்னும் பலத்தாலும் அந்த நிலைமையை ஆக்குவார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி திரை விமர்சனம்

தமிழ் படங்களில் பாரதியார் இது காறும் பாடல்களாக இடம் பெற்றிருக்கின்றார். சின்னச்சின்னப்பாத்திரங்களாக வந்து போயிருக்கிறார். கப்பலோட்டிய தமிழனில் ஒருசிறந்த துணைப்பாத்திரமாக மிடுக்காக வந்து மீசையை முறுக்கியிருக்கிறார். மற்றப்படி அவர் பெரிய டாக்டர்களாலும் (கே. பாலக்சந்தர், கமலஹாசன்) கைவிடப்பட்ட கேஸ்! இந் நிலையில் ஒரு அமைதியான சவால் மனப்பான்மையுடன் பாரதியை முழுமையாக எழுந்து உலாவரச் செய்திருக்கும் மீடியா ஆர்ட்ஸ் குழுவினரும் எழுதி இயக்கியுள்ள ஞானராஜசேகரனும் நன்றிக்குரியவர்கள்.


எட்டையபுரத்து நெருப்பு, சென்னை திருவல்லிக்கேணியில் குளிர்ந்தது வரை சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் இதில் தொடாமல், அழுத்தமாகச் சொல்லாமல் விட்டுப்போன சில சம்பவங்கள் குறித்து பாரதியிடம் உருகிப்போனவர் களுக்கு மனக்குறையும் ஏற்படலாம்.

முக்கியமாக சுப்பையா, பாரதி, பட்டம் பெற்ற தகவல் இடம் பெற்றிருக்க வேண்டாமோ? படத்தின் தலைப்பே அதுதானே! அதே நேரத்தில் பாரதியின் வரலாற்றில் பிரபல்யப்படுத்தாத சில விஷயங்கள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. காசி கங்கையில் பாரதி பூணூலைக்கழற்றிக் கடாசியது தெரியும், வீட்டில் ஆதி திராவிடர்களை அழைத்து வந்து பூணூல் அணிவித்து விட்டது தெரியும்.

மகள் தங்கம்மாளின் கல்யாணத்துக்கு பாரதியே பூணூலை அணிந்து கொண்டு மகளுக்காக இறங்கி வந்தது அநேகருக்குத் தெரியாதுதானே! செண்டிமெண்ட் பார்க்காமல் வெறும் பதினான்கு பேருடன் நலங்கெட புழுதியில் எறியப்பட்ட நல்லதோர் வீணையின் இறுதி ஊர்வலத்தில் கொள்ளிச்சட்டியுடன் தொடங்குகிற இப்படத்தில், பாரதி சின்னப்பயல் என்ற கொடுக்கப்பட்ட ஈற்றடிக்கு காந்திமதி நாதனைப்பார் அதிசின்னப்பயல் என்று பதின்வயதில் விரைந்து வெண்பா பாடுவது, பாஞ்சாலிக் கூத்தில் இடைப்புகுந்த குற்றவாளிகள்

உன் கணவன்மார்களே என்று நியாயம் பேசுவது,மணமகள் சிறுமி செல்லம்மாவிற்கு அளிக்கும் எதிர்பாராத முத்தம், பூணூலைக்கழற்றி எறிவது, தலைப்பாகைக்கட்டி முறுக்கு மீசைவைத்துக் கொள்வது, ஆதி திராவிடர்கட்கு புணூலை மந்திரோபதேசங்களுடன் அணிவித்து, எங்களை அந்தணர்களாக்கியது பாரதி என்று சொல்லுங்கள், என்பது ஜமீன்தார் கொடுத்தபணம் அனைத்துக்கும் ஜவுளிமூட்டை களைப்போல புத்தகங்களைக்கொண்டு வந்து இறக்குவது, சகோதரி நிவேதிதாவின் சந்திப்பில் புதிய பாரதி யாக மாறுவது, பாண்டிச்சேரி தலை மறைவு வாழ்கை கடையத்தில் மனைவி செல்லம்மாவின் தோள் மீது கைபோட்டு வீதியில் செல்வது, காந்தியடிகளைச் சந்தித்து கூட்டத்திற்கு அழைப்பது, "என் பொண்ணு ஒருதாழ்ந்த ஜாதிக்காரனோடு ஓடிப்போய்" அப்பா இங்கே நான் சந்தோசமாக இருக்கிறேன் 'என்று எழுதினால் அதுதான் எனக்கு உண்மையான சந்தோசம்' என்று சொல்வது முதலான பல காட்சிகள் பாரதிக்கு அடையாளமாகின்றன.

என் புதிய பழக்கத்தால் என்தலை கிறுகிறுக்கிறது என்கிறபோது, தன்னிடம் சவுடால் தனமாகப் பெண்கேட்ட நண்பரிடம் ஓய், உமது பையனுக்கு உயர்ஜாதிப்பெண்ணை மணமுடிக்க விரும்புகின்றீரே, ஏன்



உம்மைவிட தாழ்ந்த ஆதி திராவிட, அருந்ததி குலப்பெண்ணை மணம் முடித்து வைக்கக்கூடாது? என்று இடிப்பது, மகள் கல்யாணச் சடங்குக்காக பூணூல் அணிந்து கொண்டு வரும் பாரதி, தங்கம்மாளுக்காக இறங்கி வருவது எனக்கு கஷ்டமில்லை என்று ஒரு சராசரித் தகப்பனாகச் சொல்வது போன்ற காட்சிகளில் தன் நடுநிலையை உணர்த்தியுள்ளார் ஞானராஜசேகரன்.

பாரதியாக நடித்துக்கொண்டிருந்த பொழுது எழும்பிய சந்தேகங்கட்கெல்லாம் தக்க . விடையளித்து விட்டார் சாயஜி சின்டே. வாளும்கேடயமும் ஏந்தியவுடன் பொங்கும் ஆவேசம், காந்தியடிகளின் புதிய இயக்கத்திற்கு ஆசி தெரிவித்துக் கொள்ளும் மிடுக்கு மகளுக்குக் கல்யாணம் என்று முதல்நாள் இரவில் தெரிவிக்கப்பட்டு . அழைக்கப்படும் போது ஏற்படும் உருக்கம் முதலானவற்றில் சாயாஜிசின்டே வழங்கும் பாரதியில் பரவசம் அடைகிறோம்.

தமிழ்த் திரையுலகில் இதுவரை பாரதிக்கு மாதிரியாக இருந்தவர் எஸ். வி.சுப்பையா. இனி சாயாஜிசின்டே! மொழி தெரிந்திருந்தால் இன்னும் எப்படியோ!

ஆனால் மாதிரியே இல்லாத செல்லம்மாவுக்கு மாதிரியாகிவிட்டார் தேவயானி. ஓர் உயர்ந்த இடத்திலிருந்து இந்த உலகத்தைப் பாரதிபார்த்துக் கொண்டிருக்க, அவரையும் அவர் பார்வையில் படாத வறுமையான குடும்பத்தையும் பார்த்துக்கொண்டு... செல்லம்மா தேவயானி உருகவைக்கிறார். டி.பி. கஜேந்திரன் (குவளைக்கண்ணன்), புஷ்பக் (பாலபாரதி), பாரதியின் தந்தை மற்றும் முகம்தெரியாத முகங்கள் கூட அனைவருமே நிஜமாக இருக்கின்றனர்.

பீரியட் படங்களென்றால் இளையராஜா என்று மீண்டும் நிருபணமாகியிருக்கின்றது. பாரதியின் தீவிரங்களுக்கு வடிவம் கொடுப்பது போல் படம் முழுதும் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் வெறிக்காதவகையில் உடுக்கை ஒலிகள். கிறுகிறுக்கவைக்கும் அந்தப் பாட்டுக்கொரு புலவனின் பாடல்களை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கலாமே! சினிமா வில் தொடாத பாடல்கள் எத்தனையோ இருக்கின்றன. தங்கர் பச்சான், பாரதியின் காலத்தை யதார்த்தமாக(ஒளிப்)பதிவு செய்து கொண்டு போகிறார் காந்தியடிகள் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்ன ஒரு மகாகவியின் இறுதி யாத்திரையில் வெறும் பதினான்கு பேர்களே கலந்து கொண்டதற்குக் காரணமாயிருந்த சமுகப் புறக்கணிப்புக்கள் படத்தில் முக்கியமாகக் கொப்பளித்திருக்கின்றன என்றாலும் பாரதியின் 80-வது நினைவுநாள் கொண்டாடப்பட்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலும் ஜாதீய உணர்வுகள் எந்தவிதத் தேய்மானமுமின்றிதானே இருந்து வருகின்றன.

ஜாதிக்காரர்களை விடுங்கள். அவர் வரிந்த கட்டிக்கொண்டு பாடிய மீதிக்காரர்களும் காணமல் போய்விட்டார்களே! இந்த நிலமை நீடிக்கிறவரை பாரதி திரும்பத் திரும்பப் பாடப்படுவான். மீண்டும் மீண்டும் காட்சிக்கு வருவான். பாரதிக்கு மரணமில்லை.

**நன்றி: திரை அம்பலம்**

# சோவியத் யூனியன் ஒரு மாயையா?

"என்ன இப்படிச் சொல்லி யிருக்கிறீர்கள்? சோவி யத் யூனியன் ஒரு மா யை என்று........ நீங்கள் இப்படிச் சொல்லலாமா?" என்று கேட்ட அந்த நண்பரின் குரல் என்னைத் தலை குனிந்து யோசிக்க வைத்தது.

"புரூட்டஸ் நீயுமா?" என்று சீசர் அலறியது போன்றிருந்தது எனக்கு. ஆம், நான்தான். ஒரு காலத்தில் எனது சோவியத் பக்தியைக் குறித்து விமரிசனம் செய்யாதவர்கள் மத்தி யில் "ஆம் நான் ஒரு சோவியத் ஏஜன்ட்" என்று தலைநிமிர்ந்து மார் தட்டிக் கொண்ட நான்தான் சொன் னேன்.

சோவியத் யூனியன் பற்றி நான் கொண்டிருந்த நம்பிக்கைகள் அனை த்தும் பொய்யாய்க் கனவாய், பழங் கதையாய் ஆன பின்னர் அறிவு பூர்வமாய், அனுபவப் பூர்வமாய் அல்ல, உணர்வு உணர்ச்சி பூர்வமாய் அதை ஒரு மாயை என்று கூறினேன்.

நான் எத்தகைய நம்பிக்கையை ஒரு காலத்தில் சோவியத் யூனியன் பால் கொண்டிருந்தேன் என்பதை அறிந்தவர்கள்தான், நான் எத்தகைய நம்பிக்கையை இன்று இழந்து நிற் கிறேன் என்பதை உணர்ந்தவர்கள் தான் அவ்விதம் நான் கூறுகிற அவ லத்தின் சோகத்தைப் புரிந்து கொள்ள முடியும். முன்பு ஒரு முறை நான் எழுதியதை மறுபடியும் நினைத்துப் பார்க்கிறேன்.

"எனக்குப் படிக்கத் தெரிந்த நா ளிலிருந்து பாரதியார் பாடல்களோடு எனக்கோர் அந்தரங்கமான பரிச்சயம் இருந்து கொண்டு வருகிறது. முத லில் ருஷ்யா என்கிற வார்த்தை ஏதோ பெல்ஜியம், இத்தாலி என்பது மாதிரிதான் காதில் ஒலித்தது. புதிய ருஷ்யா என்ற அந்தப் பாடலின் சித்திரக் காட்சி என்னை மிகவும் கவர்ந்தது.

காளி கடைக்கண் வைப்பதும், அந்தக் கண்ணொளிப்பட்ட மாத்திர த்தில் பேய்கள் எல்லாம் கண்பொத்தி அலறி ஓடுவதும், வானத்து அமரர்கள் தோள்புடைத்து எழுதுவதும் இமய மலை வீழ்வதும், காடெல்லாம் மரம் விழுந்து விறகான செய்திக்குப்பின் தோன்றுகிற காட்சியும், இவற்றை யெல்லாம் ஒரு நொடியில் அந்த யுகப் புரட்சி வையகத்தில் செய்த தையும், கலிவிழுந்ததையும் கிருத யுகம் எழுந்ததையும்- ருஷ்யாவைப் பற்றியோ அரசியல் பற்றியோ தெரி யாத எந்த இந்தியனும் அனுபவிக்க முடியும்".

"அந்தக் காலத்தில் - 1945ல் கல்கி வாரப்பத்திரிகை ஒரு ருஷ்யப் புரட்சி மலர் வெளியிட்டது. அதன்



ஜெயகாந்தன்

பிறகு 'புரட்சி புரட்சி' என்ற வார்த் தையை எனக்கு நிறையவே கேட்கி ன்ற சந்தர்ப்பங்கள் வந்தன. அப்போ தெல்லாம் அந்தப் புரட்சி என்ற வார் த்தையைத் தொடர்ந்து பாரதியார் பாடலும் ருஷ்யாவும் என் நினைவுக்கு வரும்".

"அதாவது உலகின் பொதுச் செல்வம் ஒன்று கார்ல் மார்க்ஸ், கம்யூனிஸ்ட் இயக்கம், ருஷ்யா, இந்திய தேசிய விடுதலை இயக்கம், எங்கோ தென்கோடியில் பிறந்த சின் னச்சாமி ஐயரின் மகன், எங்கோ ஒரு பாமரக் குடும்பத்தில் பிறந்த நான், என் வழியாக இன்னும் பலர். என்று பாய்ந்து பரவுகிறது அதிசயத் தை உணர்ந்தேன்.

"ருஷ்யாவில் ஏற்பட்ட ஒரு மார்க் கம் உலகில் ஏற்படப்போகும் மாற்ற ங்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரி கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் தோன்றுவதற்கு முன்னால் ஒரு கவி ஞன் சொல்லிவிட்டான் அல்லவா? அதை நான் பூரணமாக ஏற்றுக் கொண்டு விட்டேன். (ஓர் இலக்கிய வாதியின் அரசியல் அநுபவங்கள்)

கடந்த 50 ஆண்டுக் காலத்தில் சோவியத் யூனியன் மூலம்தான் எனது சிந்தனை, படைப்பாற்றல், உலகப்பார் வை யாவும் உருவாயின. இந்தியா வையும் ஆங்கில இலக்கியத்தையும் கூட நான் சோவியத் யூனியன் மூல மாகத்தான் பயின்றேன். ஆனால் இதற்கெல்லாம் மூலகாரணமாகத் திகழ்ந்த அந்த சோவியத் அமைப்பு முறை தகர்ந்து போனது ஏன்?

சோவியத் யூனியன் இன்று சித றுண்டு போயிருப்பினும் கடந்த கா லத்தில் அது புரிந்த சாதனைகளும், இந்தியா என்கிற தேசத்துக்கும் என் னைப் போன்ற தனி மனிதர்களுக்கும் அது நல்கிய நட்புறவு மிக்க ஆதர வினையும் நான் எவ்விதம் மறப்பேன்?

சோவியத் மக்களின் மாபெரும் ஆதரவுடனும் தோழமையுடனும் மக் களையும் ஜனநாயகத்தையும் அடி த்தளமாகக் கொண்டு உருவான சோவியத் அமைப்பு ஸ்டாலின் கால த்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் எதேச் சதிகார அரசாய் மாறியது.

அந்தச் செய்திகளும் குற்றச்சாட் டுகளும் சோவியத் எதிர்ப்பாளர்களின் பொய்ப்பிரச்சாரம் என்றே எனக்கிருந்த சோவியத் மாயை என்னை எண்ண வைத்தது. பாசிசத்தின் மீது சோவி யத் யூனியன் கொண்ட வெற்றி ஸ்டாலினை ஒரு இலட்சியத் தலை வராக என்னை ஏற்கவைத்தது.

ஸ்டாலினுக்குப் பிறகு அவரைப் பற்றிய மாயைகள் முற்றாக அகன் றன. ஆனாலும் சோவியத் யூனியன் எனது நம்பிக்கைகளுக்கு ஆதாரமாய் நின்றிருந்தது. கடந்தகாலத் தவறுக ளைத் திருத்திக் கொள்ளவும் மறுசீ ரமைப்பு பெற்று புதிய தரிசனம் தரப் போகிறது சோவியத் யூனியன் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது கொர் ப்பச்சேவின் கிளாஸ்நாஸ்ட் பெரிஸ் திரோய்க்கா என்ற கோஷங்கள்.

கடைசியில் சோவியத் மக்களே சோவியத் யூனியனையும், அந்தச் சமூக அமைப்பையும் தகர்த்தெறிந்து இன்று தறிகெட்டு நிற்கிறார்கள்.

சோவியத் யூனியனை நான் கண்டதும், அதனிடமிருந்து நான் கற்றதும், அது பற்றி நான் கருதிய தும் அற்ப மாயைகளாய், ஆழ்ந்த பொருளற்றதாய்ப் (போய்விடாது!) போய்விட்ட ஒரு யதார்த்தத்தின் நிலையை எண்ணிய பொருமலில், ஆதங்கத்தில் நான் சொன்ன வார்த் தைகள்தான் "சோவியத்யூனியன் ஒரு மாயை" என்பது. அது மகிழ்சியுடன் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல. 'மாயை பொய்யெனில் முற்றிலும் கண்டனம்' என்பதும் பாரதி வாக்கு தான்.

சோவியத் யூனியனின் இன்றைய அவல நிலைகூட ஒரு மாயைதான் என்பதே அதன் உள்ளார்ந்த பொருள். காண்பதெல்லாம் மறையுமென்றால், மறைந்ததெல்லாம் காண்போம் அன் றோ என்ற பாரதியின் நம்பிக்கையை அந்தஸ ஹிருதயருடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

நன்றி:- குமுதம்
(kumudam.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் சூதாட்டப் படலம் முடிவு ?

கிரிக்கெட் உலகை பீடித்திருந்த சூதாட்டம் எனும் வைரஸ் நோய் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா தாமாகவே முன்வந்து எடுத்திருக்கும் நடவடிக்கைகள் பாராட்டப்படக் கூடியவையே. அதிலும் குறிப்பாக இந்தியாவின் சி.பி.ஐ யின் பங்கு அளப்பரியது.

இந்தியாவின் முன்னாள் அணித் தலைவர் அசாருதீன், அஜய் சர்மா, மனோஜ் பிரபகர், ஜடேஜா, முன்னாள் இந்திய அணியின் உயற் பயிற்சியாளர் டாக்டர் இரானி ஆகியோர் குற்றவாளிகளாக நிரூபணமாகி தண்டிக்கப்பட்டுள்ளார்கள். இதில் சகுனியையும் மிஞ்சும் வகையில் பகடைக்காய்களை பாதாள உலக முடிசூடா மன்னர்களான தாவூத் இப்ராஹிம், குப்தா போன்றவர்களுடன் சேர்த்து உருட்டி கோடி, கோடியாகப் பணம் புரட்டியவர்தான் அசாருதீன்.



தனது தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்து கோடீஸ்வரரான அசாருதீனிற்கு கிடைத்துள்ள தண்டனை அவரது ஆயுட்காலம் முழுவதும் கிரிக்கெட் விளையாட்டுடன் எந்தவிதமான தொடர்புகளையும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதே ஆகும்.

அசாருதீன் மீது எந்த விதமான கிரிமினல் நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உள்ளது. ஜனநாயகக் கோட்பாடுகளிலுள்ள குறைபாடுகளில் இவ்வாறு தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் கூட தப்பிக் கொள்வதற்கு இடமுண்டு.

100 கோடி மக்களை ஏமாற்றி, தனது தாய் நாட்டையும் விற்று கோடி கோடியாகச் சம்பாதித்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் 39வயது நிரம்பிய அசாருதீனை இனிமேல் கிரிக்கெட் விளையாட வேண்டாம் என்று மட்டும் தீர்ப்பு வழங்குவது எந்த வகையில் நியாயம்?

உதாரணத்திற்கு தனது இளம் வயதில் பல பெண்களை தன் சகோதரிகள் ஏன் தன்னைப் பெற்ற தாயைக்கூட பலவந்தமாக கற்பழித்தவன் தனது 80வயதில் குற்றவாளியாகக் கருதப்பட்டவனுக்கு தண்டனை வழங்கப்படுகின்றது. என்ன தண்டனை? "நீ இனி மேல் எந்தப் பெண்ணுடனும் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது" 80 வயதாகிவிட்ட கிழவனும் சிரித்துக் கொண்டே தண்டனையை ஏற்றுக் கொள்கின்றான்.

தனது தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்தவன் எவனாக இருந்தாலும் பகிரங்கமாக தூக்கிலிடப்பட வேண்டும்.

சென்ற மாதம் நடைபெற்ற கிரிக்கெட்



டெஸ்ட் போட்டிகளில் இந்தியா ஸிம்பாப்வே நாடுகளிற்கிடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் இந்தியா 1-0 என்ற ரீதியில் வெற்றியீட்டியது.

இந்தியா சார்பில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கார், அணியின் தலைவர் கங்குலி, ராகுல் ட்ராவிட் ஆகியோர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இந்தியாவில் தற்போது அணியிலுள்ள இளம் வீரர்களான சடகோபன் ரமேஷ், சிறிராம், அகார்கர், சாஹீர்கான், யுவராஜ் சிங், சிவசுந்தர் தாஸ் ஆகியோர் டெண்டுல்கார், கங்குலி, ட்ராவிட் ஆகியோருடன் இணைந்து எதிர்காலத்தில் இந்தியாவை முன்னணிக்கு கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கை தென்படுகின்றது. ஸிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் இந்தியா மிக இலகுவாக 5இற்கு 1 என்ற ரீதியில் வென்றது.

பாகிஸ்தானில் நடைபெற்ற பாகிஸ்தான்- இங்கிலாந்து டெஸ்ட் போட்டித் தொடரில் இங்கிலாந்து நசார் உசெயின் தலைமையில் 1-0 என்று வென்றது. இங்கிலாந்து ஏறத்தாழ ஒரு டெஸ்ட் தொடரை வென்றது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கா சென்ற நியூசிலாந்து அணி 3டெஸ்ட் தொடரில் 2-0 என்ற எண்ணிக்கையில் தென்னாபிரிக்கா அணியிடம் தோல்வி அடைந்தது. தென்னாபிரிக்கா அணியில் பொலொக், குளுஸ்னர், காலிஸ், கேர்ஸ்டன், கலினன், பவுச்சர், மக்கென்ஸி போன்ற திறமையான வீரர்கள் உள்ளனர்.

இவர்களுடன் டெஸ்ட் தொடர்களில் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான அலன் டொனால்ட் சேர்ந்து கொள்ள தென்னாபிரிக்கா உலகில் சிறந்த கிரிக்கெட் அணிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

சர்வதேச உலகில் தற்போது அவுஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் மிகத் திறமையான இடத்தைப் பிடித்துள்ளன. அவுஸ்திரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் படுமோசமாக விளையாடி மண்கவ்விய நிலையிலுள்ளது.

முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் வென்ற அவுஸ்திரேலியா அணி சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் வென்று ஓர் உலக சாதனைளை நிலைநாட்டியுள்ளது. இக்கட்டுரை எழுதும் தருவாயில் அவுஸ்திரேலியா 4 வது டெஸ்ட் போட்டியிலும் வெல்லும் நிலையில் உள்ளது. மேற்கிந்திய அணிகள் 1970-80களில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளான 5-0 என்ற அளவில் வென்று

(தொடர்ச்சி 05பக்கம்)

## போட்டி

01. சச்சின் டென்டுல்கார் (இந்தியா)
02. மைக் அத்தர்டன் (இங்கிலாந்து)
03. பிரயன் லாரா (மே. இந். தீவுகள்)
04. சவ்ரவ் கங்குலி (இந்தியா)
05 ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா)
06. ஸ்டீவ் வோ (அவுஸ்திரேலியா)
07 அலன் கில்கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா)
08. சேர்ன் வார்னே (அவுஸ்திரேலியா)
09. கினென் மக்ராத் (அவுஸ்திரேலியா)
10. அலன் டொனால்ட் (தென்னாபிரிக்கா
11. முத்தையா முரளிதரன் (இலங்கை)
12. ரிக்கி பொன்டிங் (அவுஸ்திரேலியா)

வாசகர்கள் மேலே தரப்பட்டுள்ள அணியில் ஏற்படுத்தவிருக்கும் மாற்றங்களை எமக்கு எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தயாளன்

# ஒலிம்பிக்ஸில் பெண்கள்

பெண்ணிய சிந்தனை கொண்டவர்கள் ஒலிம்பிக்ஸ் வரலாற்றைப்படித்தால் கொதித்துப் போய் விடுவார்கள். கிரேக்க நாட்டில் துவங்கிய இந்த விளையாட்டுத் திருவிழாவில் ஆரம்பத்திலிருந்தே பெண்கள் ஒரு பொருட்டாக கருதப் படவில்லை.

வரலாற்றுச் சான்றுகளின்படி, தொடக்க கால ஒலிம்பிக்ஸில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. இவ்வளவு ஏன், போட்டிகளைப் பார்க்கக்கூட பெண்கள் அனுமதிக்கப் படவில்லை.

ஆனால் இந்தத்தடை, மணமான பெண்களுக்கு மட்டும்தான். போனால் போகிறது என்று கன்னிப்பெண்களுக்கும் விலை மாதர்களுக்கும் மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் சண்டி ராணி கணக்கில் இருந்த பெண்கள் சிலரது முயற்சியால், பெண்களுக்கெனத் தனி விளையாட்டுப்போட்டிகளை அந்நாளிலேயே நடத்தினர். கிரேக்க கடவுள் "ஜியஸ்"க்கு நடந்த திருவிழாவில் ஒருபகுதியாக ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டன என்றால், பெண் கடவுளான ஹராவுக்காக கொண்டாடப்பட்ட திருவிழாவையொட்டி பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடந்துள்ளன. இப்படி பெண்கள் ஓரங்கட்டப்பட்டாலும் கூட, ஒலிம்பிக் சரித்திரத்தில் பெண் சாம்பியன்கள் பற்றிய பதிவுகள் இல்லாமல் இல்லை. கள்ளிப்ட்டீரியா என்னும் பெண்மணி ஒலிம்பிக் குத்துச்சண்டை பயிற்சியாளராக இருந்ததாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது. இவர்தான் முதல் பெண்கோச் என்றும் குறிப்பிடப்படுகிறார்கள்.

"கைனிஸ்கா" என்னும் ஸ்பார்டன் இளவரசி, முதல் பெண் ஒலிம்பிக் சாம்பியனாக குறிப்பிடப்படுகிறார். குதிரைகளை பழக்குவதில் கில்லாடியாக இருந்தவராம் இவர். இவரது குதிரைகள் ஒலிம்பிக்கின் தேரோட்டப்போட்டி ஒன்றில் வெற்றி பெற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இப்போது இல்லையென்றாலும் அந்நாளில் ஒலிம்பிக்ஸ் போன்ற பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகளில் தேரோட்டம் உண்டாம். தமிழ்நாட்டுக் கிராமத்தில் வில்வண்டிப் போட்டிகள் இன்றைக்கும் நடைபெறுவது போல) ஆனால், அந்த நாட்களில் நடந்த ஒலிம்பிக்ஸ் தேரோட்டும் போட்டியில் வெற்றிபெற்றவர்கட்கு இப்போது வழங்கப்படுவதைப் போன்று பதக்கங்கள் தரப்படுவதில்லை பெண்களே! பரிசுப்



பொருளாக வழங்கப்பட்டனர் என்று நம்பகமான தகவல்கள் உள்ளன.

பழையகால ஒலிம்பிக்ஸில்தான் இப்படி ஒரு பாரபட்சம் என்றால், நவீனகால ஒலிம்பிக்ஸிலும் மங்கையர்களின் நிலை மாறிவிடவில்லை. 1896ல் நடந்த முதல் ஒலிம்பிக்ஸில் நோ லேடீஸ் என்று கட்டாயமாக கூறிவிட்டனர். 1900ல் நடந்த இரண்டாவது நவீன ஒலிம்பிக்ஸில்தான் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

அதுவும் ஒப்புக்கு சப்பாணிபோல- டென்னிஸ், கோல்ஃப், வில்வித்தை என மூன்று விளையாட்டுகளில் மட்டும்தான்! இதிலும் கூட இந்த மூன்றாவது விளையாட்டுப்பற்றி நிறைய சர்ச்சை இருக்கிறது. டென்னிஸ் கோல்ஃப் என்ற இரண்டு விளையாட்டுக்களிலும் பெண்கள் பங்குபெற்றதாக ஏகமனதாக இன்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இந்த மூன்றாவது விளையாட்டுப் போட்டி வில்வித்தை என்பதில் தொடங்கி, பலூன் விடும் போட்டி, பட்டு விடும் போட்டி என்பது வரை நீண்டு அவற்றில் பெண்கள் பங்கேற்றதாக நிறைய ஹேஸ்யங்கள் உள்ளன.

எது எப்படியோ, ஆனால் அந்த ஒலிம்பிக்ஸிலும் பெண்கள் வேண்டாத விருந்தாளிகளாகவே இருந்தனர். 1900ல் இந்த ஒலிம்பிக்போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்றது.

2000ம் வருகிறது என போனவருடம் நாம் குதித்ததுபோலவே. அப்போது பாரீஸ் விழாக்கோலம் பூண்டிருக்க, ஒலிம்பிக்கையும் இதன் ஒரு பகுதியாகவே பலரும் நினைத்தனர்.

ஒலிம்பிக்கில் பங்கேற்ற வீரர்களுக்கே கூட, தாங்கள் ஒலிம்பிக்ஸில் பங்கேற்கிறோமோ, புது நூற்றாண்டு தொடக்கத் திருவிழாவில் பங்கேற்கிறோமோ எனக்குழப்பம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் இந்த குழப்பத்தின் பின்னணியில் பெண்களின் ஊடுருவலை யாரும் பொருட்படுத்தவில்லை போலும்! அடுத்து வந்த ஒலிம்பிக்ஸில் பெண்களை இரண்டாம் தரபிரஜைகளாக நடத்துவதில் ஒலிம்பிக் நிர்வாகிகள் குறியாக இருந்திருக்கின்றனர்.

பெரும்பாலான போட்டிகளில் பெண்களுக்கு நோ என்றிபோர்டே தொடங்கியது கலந்துகொண்ட போட்டிகளிலும்கூட பெண்களுக்கென தனிவிதிகள் உருவாக்கப்பட்டன.

1928-ம் ஆண்டுதான் தடகளப் போட்டிகளில் பங்கேற்க பெண்களுக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது. விளையாட்டுப்போட்டியில் பங்கேற்க பெண்கள் லாயக்கற்றவர்கள் என்று கருதப்பட்டதாலேயே, இப்படியொரு நிலை நிலவியது.

எனினும் போகப்போக பெண்கள் ஒலிம்பிக்ஸின் கண்கள் என நினைக்கும் அளவிற்கு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இருந்தும் இப்போது கூட ஆண்களைவிட பெண்கள் ஒருபடி மட்டம் என்று கருதப்படும் நிலை இருப்பதாக போர்க்கொடி தூக்கும் பெண்ணியவாதிகள் இருக்கத்தான் செய்கின்றனர்.

மறுபக்கத்தில், என்ன இருந்தாலும் ஆண் வீரர் ஓடும் வேகத்துக்கு ஈடாக பெண் வீராங்கணையால் ஓட முடியுமா எனக் கேட்கும் ஆணாதிக்கப் பேர்வழிகளும் இருக்கவே செய்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, இன்னமும் பெண்கள் சர்வதேசப்போட்டிகளில் பங்கேற்கக் கூடாது எனத்தடை போடும் நாடுகள் இருக்கின்றன. முஸ்லீம் நாடான ஈரான் தனது அணியில் வீராங்கனைகளைத் தேர்வு செய்வதில்லை.

1992 பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகளின் போது ஈரான் நாட்டுக் கொடியை ஒரு ஸ்பானிய மங்கை ஏந்திவர தேர்வுசெய்யப்பட்டதால் அந்நாட்டு அணியினர் ரகளை செய்துவிட்டனர்.

அல்ஸீரியா நாட்டு வீராங்கனை ஹஸிபா பவுஸ்மெர்க்க ஒலிம்பிக்கில் பங்கேற்று தங்கம் வென்றபோது திறந்தகாலுடன் ஓடி அசிங்கப்படுத்தினார் என்று அந்த நாட்டு அடிப்படைவாதிகள் அவரை தூற்றியதுடன், கல் எடுத்து அடித்ததும் சோகமான வரலாற்று நிஜம் இதெல்லாம் பழங்கதை என்பதை சிட்னி ஒலிம்பிக் நிரூபித்துள்ளது.

சிட்னியின மகளிர் சாதனைகளே பெரிதாகப்பேசப்பட்டன. அமெரிக்காவில் மரியோன் ஜோன்சும், ஆஸ்திரேலியாவில் கோத்தேஃப், மேனுமே இதற்கு சான்று.

நன்றி: மின்னம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோக்கிரட்டீஸ் பதில்கள்



எஸ். சின்னதம்பி – மானிப்பாய்.

**நோர்வேயின் சமாதான முயற்சிகள் ஈடேறுமா ?**

ஈடேற வேண்டும் என்பதுதான் எம் எல்லோரினதும் ஆசை.

வ. ஜெகநாதன் – பம்பலபிட்டி.

**மிருசுவிலில் எட்டு சிவிலியன்கள் கொன்று புதைத்தது பற்றி ?**

தமிழர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற பௌத்த சிங்கள நச்சு வெறி ஊறிப்போய் கிடக்கிறது. அது 5 வயதுப் பாலகனின் காலை முறிக்கிறது. இலங்கையின் இனங்கள் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியப்பாடு சகிப்புத் தன்மை குறைந்து வருகிறது.

எஸ். ஜீவரட்ணம் – மன்னார்.

**புலிகள் ஒருதலைபட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்களே?**

வார்த்தை தவறாத வாக்குறுதியாக இருந்தால் சரி.

எம். தளையசிங்கம்–களுவாஞ்சிக்குடி.

**பீற்றர்கெய்ன் சுயநிர்ணய உரிமை பற்றி பேசியதற்கு லக்ஷ்மன் கதிர்காமர் கோபமுற்றாரே?**

அதிகாரப் பகிர்வு பற்றிய மிக உயர்ந்த கோட்பாடு சுய நிர்ணய உரிமை. அது பிரிவினை என்று அர்த்தப்படாது. பௌத்த சிங்கள பேரினவாதம் சுய நிர்ணய உரிமை என்ற சொற் பதத்தையே உச்சரிக்க விரும்பவில்லை.



ஆர். ராசரட்ணம் – திருமலை.

**தேர்தலுக்குப் பிந்திய தேசிய அரசியல் எவ்வாறு இருக்கிறது ?**

அரசின் செயற்பாடுகளில் சுறுசுறுப்பு இல்லை. எல்லாமே மந்த கதியில்தான் நடைபெறுகிறது. ரூபாவின் பெறுமதி பல தடவை குறைக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மூன்று தடவை அதிகரித்துள்ளன. யுத்த செலவினங்கள் என்ற சேற்றுப் புதைகுழியில் முழு நாடும் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

ஆர். விஜயபாரதி – வட்டவளை.

**இந்தியாவில் அடுத்தடுத்து உலக அழகு ராணிகள் உருவாகிறார்களே ?**

மேற்குலகின் இந்தியச் சந்தையைக் கவருவதற்கான தந்திரோபாயம் என பலர் பேசிக் கொள்கிறார்கள்.

ஏ. கந்தசாமி – வெள்ளவத்தை.

**லங்கா முதித்த கப்பலில் பிரயாண சௌகரியம் எப்படி ?**

கால் நீட்டமுடியாது. வாந்தி எடுப்பதானால் முன்னால் இருப்பவரின் தலையில் தான் எடுக்க வேண்டும். சுற்றிவர சிறுநீர் கழிப்பதால் அந்தக் குளிர்மை வெக்கையைத் தணிப்பதாக அனுபவப்பட்ட பிரயாணிகள் கூறுகிறார்கள்.

ஆ. மதிவதனி–கொட்டாஞ்சேனை.

**தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயற்பாடுகள் எப்படி**



**இருக்கின்றன ?**

அந்தக் குழு இருக்கிறதோ இல்லையோ தமிழ் மக்கள் அனுபவிக்கும் தொல்லைகளுக்கு மாத்திரம் குறைவில்லை.

---

# இந்த நிலை மாற...........

## 1ம் பக்க தொடர்ச்சி

நாளில் வரிசையில் இடம் பிடிப்பதற்கு சீருடை தரியாதவர்களுக்கும், தரித்தவர்களுக்குமென சில ஆயிரங்கள் வழங்க வேண்டும். பல்வேறு சிரமங்கள் மத்தியில் மூட்டை முடிச்சுகளுடன் கொழும்புக்கு வந்து சேர்ந்தால் உடனடியாக டாக்டரிடம் செல்ல வேண்டியிருக்கும். அதற்கு 300, 400 ரூபாக்கள் செலவாகும்.

பொலிஸ் நிலையத்தில் பதிவதற்கு, போட்டோ எடுப்பதற்கு 125 ரூபா பொலிஸ் பதிவு விண்ணப்படிவம், அடையாள அட்டைகளை பிரதியெடுக்க ஆட்டோச் செலவு என 200 ரூபாக்கள் செலவாகும். மொத்தத்தில் ஒரு மனிதனுக்கு 3000 ரூபா தேவைப்படுகிறது. அவசரமாக கொழும்புக்கு வரும் சராசரி யாழ் பயணி இவ்வளவு தொகையையும் (கப்பம்) செலுத்தியே ஆகவேண்டும்.

தொல்லை தவிர்ப்புக்குழு என்றொரு குழு இருக்கிறது. இதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. இராணுவத்திடம் அனுமதி பெற்று கொழும்பு வரும் பஸ் பிரயாணிகள் தாம் கப்பலில் பிரயாணம் செய்வதற்கான பற்றுச் சீட்டையும் காட்டி தாம் தங்கியிருக்கும் வாடகைக் குடியிருப்பாளரான தனது உறவினர்களையும் அழைத்துச் சென்றும் பொலிஸ் நிலையத்தில் உள்ளவர்கள் வீட்டு உரிமையாளரை அழைத்து வருமாறு வற்புறுத்துகிறார்கள். விபரங்கள் தனிச் சிங்களத்திலேயே கோரப்படும்.

### அகதிமுகாம்களா? சிறைக்கூடங்களா?

வவுனியா அகதி முகாம்களில் 22 ஆயிரம் பேரும் 5 தொடக்கம் 10 வருடம் வரையில் சிறையில் உள்ளது போன்று வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் குடும்பத் தலைவர்கள் வேலைக்கு போவதாக இருந்தால் அங்குள்ள பொலிஸ் காப்பரணில் கையெழுத்திட்டே செல்ல வேண்டும். மாலையில் திரும்பி விடவேண்டும்.

வவுனியா மன்னார் மக்கள் அவசரத்திற்கு வெளியிடங்களுக்கு பிரயாணம் செய்வதானால் வெளி நாட்டுக்குச் செல்வதைவிட பன்மடங்கு சிரமங்களையும் கெடுபிடிகளையும் எதிர்நோக்க வேண்டும்.

முகாம்களில் இருப்பவர்களை அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் குடியேற்றுவதற்கு வசதிகள் இருந்தும் அவர்கள் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அவ்வாறு குடியேற அனுமதிக்கப்படவில்லை. மக்கள் உழைத்து வாழத் தயாராக இருந்தும் அவர்களாக அகதிகளாக வைத்திருப்பதிலேயே அதிகாரமும் அதிகாரிகளும் அக்கறை காட்டுகின்றனர். இதற்கு நொண்டிச் சாட்டுகளைக் கூறிக் கொண்டு காலத்தைக் கடத்துகின்றனர்.

### கரணம் தப்பாவிட்டாலும் இங்கு மரணம் தப்பாது

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதி அப்பகுதி மக்களின் நாளாந்த வாழ்வின் மரணப்பொறியாக இருக்கிறது. இடையில் அகப்பட்டு இறக்கும் அப்பாவிகள், பாலியல் பலாத்காரப் படுகொலைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் டாக்டர் ஒருவர் பலியானதும், இன்னும் சில டாக்டர்கள் காயமடைந்ததும் நாம் அறியாததல்ல. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் யுத்தப் பிரதேசத்தில் பணியாற்றும் டாக்டர்களே படுகொலை செய்யப்படும் போது மற்றவர்களின் பாதுகாப்பைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் வாகனத்தினால் மோதப்பட்டு உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவி ஒருவர் உயிரிழந்ததும், பல்கலைகழக மாணவி ஒருவர் இராணுவாகனம் மோதி காலை இழந்ததும் அண்மைக்காலச் செய்திகள். யுத்தம் நடக்கும் பகுதியில் இருக்கும் மக்களை மக்களாகக் கருதாத போக்கும் மேலாதிக்க மனோபாவமுமே இத்தகைய சம்பவங்களுக்குக் காரணமாகும்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஐந்து வயதுச் சிறுவனொருவன் சில தினங்களுக்குமுன்னர் கொல்லப்பட்டதும் இங்கு நினைவூட்டப்பட வேண்டிய விடயம்.

இறுதியாக மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற எட்டு பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஐந்து வயதுச் சிறுவனும் அடக்கம்.

### புத்த பிக்குகளும் யுத்தத்தைப் போதித்தால்!

பிந்தனுவெவவிலிருந்து மிருசுவில் வரை கடந்த சில மாதங்களாக எமது நாட்டில் இரத்தவாடையே வீசுகிறது.

பிந்தனுவெவ சம்பவங்களின் பின்னர் மலையக மக்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இனவாத அரசியல்வாதிகள் வாய்க்கு வந்தபடி விசம் கக்குகிறார்கள். போர் முழக்கமிடுகிறார்கள். ஜன்னி கண்டவர்கள் போல் பிதற்றுகிறார்கள்.

அரசின் அங்கத்தவர்கள் கூட ஒன்றுக்கொன்று முரணாக தலைகீழாக பேசுகிறார்கள்.

சாதாரண நாகரிகமான மக்கள் பிரிவினர் அதிகாரப் பகிர்வையும், சமாதானத்தையும் விரும்புகிறார்கள்.

இதற்கான ஆக்கப்பூர்வமான செயற்பாட்டு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதிலேயே இந்த நாடு விமோசனம் பெறும். ஆனால் அதுபற்றிய சுரணையற்றவர்களாகவே தற்போதைய ஆளும், எதிர்கட்சி அரசியல்வாதிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

### ஊர் இரண்டு பட்டால்த்தானே கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

அரசியல்வாதிகளுக்கோ, யுத்தப் பிரபுக்களுக்கோ, வியாபாரிகளுக்கோ, அதிகாரிகளுக்கோ, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கோ கிடையாது. இந்த இரத்த களரியில் தங்கள் நலன்களை எவ்வாறு பாதுகாப்பது அதனுடன் எவ்வாறு சேர்ப்பது என்பதே இவர்களின் பிரச்சினை. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதல்ல.

தமிழ் மக்களின் தற்போதைய அவல நிலை, இந்த யுத்தம் எல்லாமே பலருக்கு பணம் பண்ணும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. யுத்தம் தொடரத்தொடர இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது.

கொழும்பிலும் வடக்கு கிழக்கில் உள்ள பதுக்கல் தமிழ் வியாபாரிகள் இராணுவத்திற்கு தளபாடங்கள், உடைகள் மற்றும் காலணி வழங்கும் முகவர்கள், புலிகளுக்கு வெளி நாடுகளில் நிதி திரட்டுபவர்கள். ஆயுதங்கள் ஒழுங்கு செய்து கொடுப்பவர்கள், வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்துபவர்கள், விபச்சார விடுதிகள் நடத்துபவர்கள் எல்லோருக்கும் இந்த யுத்தமும் தமிழ் மக்களின் அழிவும் மரணமும் குபேர வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. ஏன்? பல பிரேதப் பெட்டிக்கடைக்காரர்களைக் கூட இந்த யுத்தம் பெரும் பணக்காரர்களாக ஆக்கியிருக்கின்றது.

பல கள்ளக்கடத்தல் வியாபாரிகளும் இந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்கள். இதனால் பாராளுமன்ற அரசியல் அமைப்பும் சீரழியும் நிலையை அடைந்துள்ளது.

ஒரு காலத்தில் அர்ப்பணத்தையும், தியாகத்தையும் கொண்டிருந்த தமிழ் பிரதிநிதித்துவம் இவ்வளவு பெரிய போராட்டத்திற்கு பின்னர் இத்தகையதொரு சீரழிவு நிலையை அடைந்திருக்கிறது.

தமிழ் அரசியலரங்கு தூய்மைப்படுத்தப்படுவதற்கும், தரத்தை உயர்த்துவதற்கும் ஜனநாயகமும், மனித உரிமைகளை உறுதிப்படுத்தப்படுவதும் அடிப்படை நிபந்தனைகளாகும். ஜனநாயகமில்லாத, மனித சிந்தனைகளுக்கு தடைபோட்ட தற்போதைய நிலவரங்களுக்கு புலிகளே பெரும் பொறுப்பேற்க வேண்டும்.

அதிகாரப் பகிர்வையும், ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்டவும், மக்களின் அன்றாடக் கஷ்டங்களுக்கு நிவாரணம் காணவும் சகல தரப்பினருமே முயற்சிக்க வேண்டும்.

மக்களை, மக்களின் துன்பங்களை முதன்மைப்படுத்தி சிந்திக்கும் நிலை வேண்டும். ●

---

## யாழ் பல்கலைகழகத்தில் சமாதானத்தை வலியுறுத்தும் கூட்டம்

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி 29-12-2000 இன்று மு.ப 11.00 மணியளவில் யாழ் பல்கலைகழக கைலாசபதி அரங்கில் இடம் பெற்ற கூட்டத்தில் 3500க்கு மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர்.

அனைத்து பீடங்களையும் சேர்ந்தவர்களும் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர். உபவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வரலாற்றுத்துறை பேராசிரியர் சிற்றம்பலம் கலைத்துறை பேராசிரியர் பாலச்சந்திரன் உட்பட பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர். ஊழியர் சங்கம், ஆசிரியர் சங்கங்களை சேர்ந்தவர்களும் இக் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே கூட்டம் அமைந்தது.

இதற்கு முன்னர் பல்கலைகழகத்தில் புலிகளுக்கு சார்பாக நடாத்தப்பட்ட போராட்டங்களில் முன்னின்றவர்கள் இதில் ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இன்றைய கூட்டத்தில் வெளியார் எவரும் கலந்துக்கொள்ளவில்லை. ஆனால் பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் பல்வேறு பீடங்களையும், மாணவர் ஒன்றியங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் உரையாற்றினர். இங்கு உரையாற்றிய மருத்துவபீட மாணவர் பிரதிநிதி மட்டும் தன்னை அறிமுகம் செய்து கூட்டத்தில் உரையாற்றினார்.

இது சமாதானத்தை வலியுறுத்தி நாம் எடுத்துள்ள முதலாவது நடவடிக்கை என்றும் இதே போன்று

(தொடர்ச்சி 03பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூகோஸ்லாவியா

(சென்ற இதழிலின் தொடர்ச்சி)

யூ யூகோஸ்லாவியா மீதான நேட்டோ பயங்கரவாதிகளின் ஆக்கிரமிப்புத் தொடங்கியது. 12 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட (இதில் 10 மில்லியன் சேர்பியர்கள்) சின்னஞ்சிறு கீரைப்பாத்தி நாடான யூகோஸ்லாவியா மீது 19 நாடுகள் இணைந்த 380 மில்லியன் சனத்தொகையையும், யூகோஸ்லாவியாவைவிட 37 மடங்கு இராணுவமும் கொண்ட நாடுகள் சண்டையைத் தொடங்கின.

தீயவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற பைபிள் வாசகம் எங்கும் ஒலித்தது. நேட்டோ தினமும் பெருந்தொகைப் பணத்தை யுத்தத்திற்கு செலவு செய்தது. ஜேர்மனிய இராணுவமான Bundeswchr பாவித்த Harm ரொக்கட் ஒன்றின் விலை 400,000 மார்க்குகளாகும். இதில் 1000ற்கு மேற்பட்டவைகள் எடுத்துச் செல்லப்பட்டதாய் சொல்லப்பட்டது.

ஜெர்மனிய Tornado விமானத்துக்கான ஒரு மணி நேரச் செலவு 56,000 மார்க்குகளாகும். ஜெர்மனிய Leopard – A5 தாங்கி ஒன்றின் விலை 6 மில்லியன் மார்க்குகளாகும். ஜேர்மனிய இராணுவத் தொழிற்துறை மில்லியன் கணக்கான மார்க்குகளைத் தினமும் ஈட்டிக் கொண்டிருந்த போது ஜெர்மனிய இராணுவத்தினருக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு 80 முதல் 130மார்க்குகள் மட்டுமேயாகும்.

அமெரிக்க விமானமான B-52, 16,000 கிலோ மீற்றர் இடைவேளையின்றிப் பறக்கக் கூடியது. இந்த யுத்த விமானம் பிரிட்டனில் இருந்து புறப்பட்டு 3மணி நேரத்தில் யூகோஸ்லாவியா பறந்து சென்று 15,000 மீற்றர் உயரத்திலிருந்து குண்டுகளை வீசியது. மற்றைய அமெரிக்க குண்டுவீச்சு விமானமான CAL-cm ஒவ்வொன்றும் 1.5 தொன் நிறையுள்ள 8குண்டுகளை ஒவ்வொரு தடவையும் கொண்டு சென்று வீசியது. இந்த ஒரு குண்டின் விலை 1 மில்லியன் டொலராகும்.

மேலும் Boeing உற்பத்தியான அமெரிக்க "Apache" ஹெலிகொப்டர்களின் விலை 2.2 மில்லியன் டொலர்களாகும். இது 3சென்ரி மீற்றர் அளவுடைய 1200 கிரனெட்டுக்களையும் 76 ராக்கெட்டுக்களையும் 16 தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளையும் கொண்டதாகும்.

இது ஈராக்கிய யுத்தத்தில் 500 ஈராக்கிய தாங்கிகளை அழித்ததாய் பெருமை பேசப்பட்டது. இத்தாலியின் Aviano விமானத்தளத்தில் இருந்து யூகோஸ்லாவியாவில் பறந்த அமெரிக்க யுத்த விமானமான A10 – Thunderbolt அணுக்கதிர் இயக்கம் கொண்ட உரான் குண்டுகளை (Uran Munition) பாவித்தது.

யூகோஸ்லாவியாப் படைகட்கு எதிராய் பாவிக்கப்பட்ட இக்குண்டு ஒவ்வொன்றும் 30மில்லி மீற்றர் நீளமும் 272 கிராம் நிறையுடைய உரான் ஒக்சைட் (Uranoxid) கதிரியக்கம் கொண்ட துகள்களைக் கொண்டதாகும். இது மனித உடலின் கலங்களைத் தாக்கும் புற்று நோய், ஈரல் பாதிப்பு, ஆண்மை இழப்பு இவைகளையும் இறுதியில் மரணத்தையும் ஏற்படுத்தும்.

1943இல் ஜெர்மனியில் நாசிகளால் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அமெரிக்க இராணுவத்திற்கு போய்ச் சேர்ந்தது. அமெரிக்காவின் இருப்பில் உள்ள 560,000 தொன் அணுக் கழிவுகளிலிருந்து இவை தயாரிக்கப்படுகின்றன. பலபத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு கதிரியக்கம் உடைய இவை அழிக்கப்பட வேண்டுமாயின் பல மில்லியன் டாலர்கள் தேவைப்படும். எனவே இவை இலாபமீட்டும் நவீன இராணுவ உபகரணங்களாக்கப்பட்டு விட்டன.

ஈராக் மீதான யுத்தத்தில் மட்டும் 900தொன் நிறையுடைய 780,000 குண்டுகள் ஈராக்கிய இராணுவம் மற்றும் பொது மக்களுக்கும் எதிராய் பாவிக்கப்பட்டது. இதனால் 80,000 ஈராக்கிய மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களில் இறப்பு மற்றும் அழிவு விகிதங்கள் தெரியவில்லை.

ஈராக் மீதான யுத்தத்தில் மட்டும் 900தொன் நிறையுடைய 780,000 குண்டுகள் ஈராக்கிய இராணுவம் மற்றும் பொது மக்களுக்கும் எதிராய் பாவிக்கப்பட்டது. இதனால் 80,000 ஈராக்கிய மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களில் இறப்பு மற்றும் அழிவு விகிதங்கள் தெரியவில்லை. ஆனால் தன்வினைத் தன்னைச் சுட்ட கதையாக இது இதுவரை 80,000 அமெரிக்க வீரர்களை பாதித்துள்ளதாய் மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## பல்லின மக்களுக்கு இடையே அறுவைச் சிகிச்சை

ஆனால் தன்வினைத் தன்னைச் சுட்ட கதையாக இது இதுவரை 80,000 அமெரிக்க வீரர்களை பாதித்துள்ளதாய் மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

39,000 இராணுவத்தினர் கதிரியக்கப் பாதிப்புக்குள்ளாகி இராணுவச் சேவைக்கு தகுதியற்றவர்களாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். 4,000 அமெரிக்க இராணுவத்தினர் இறந்துள்ளனர். பலநூறு இராணுவத்தினருக்கு அங்கவீனமான குழந்தைகள் பிறந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் அமெரிக்க அரசுமேல் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள்.

பிரிட்டிஷ் இராணுவத்தில் அது வரை 160பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முதன் முறையாக அமெரிக்கா பாவித்துள்ள "Rockbys" குண்டுகள் இவை ஒவ்வொன்றும் சிறிய 247 மினி குண்டுகளையும் உடையதாகும். இது 450 சதுர மீற்றர் பரப்பில் உயிர்கள் பொருட்கள் யாவற்றையும் அழிக்கவல்லது. மே 15இல் கொசோவா அகதிகள் மேல் நேட்டோ வீசிய குண்டுகள் இத்தகையதே. இதில் 75பேர் இறந்து 50பேர் காயமடைந்தனர்.

நேட்டோ பாவித்த Pavewary III குண்டு ஒன்றினது விலை 34,000 மார்க்குகளாகும். பிரிட்டனின் குரூஸ் ஏவுகணைகள் (Cruise Missiles) மார்ச் 8ம் திகதி வரை 30க்கும் மேற்பட்டவைகள் ஏவப்பட்டன. இந்த ஏவுகணை ஒன்றின் விலை 1.5 மில்லியன் மார்க்குகளாகும். ஏப்ரல் 8 வரை 15 நாட்களில் நேட்டோவின் யுத்தச் செலவு 12 மில்லியன் டொலர்கள். 70 விமானங்களுடன் தொடங்கப்பட்ட தாக்குதல்கள் 10 நாட்களுக்கிடையில் 1200 விமானங்கள் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

இதில் தினமும் 1000 விமானங்கள் தாக்குதல் களில் ஈடுபட்டன. இதில் 700 மேற்பட்டவை அமெரிக்க விமானங்களாகும். இந்த யுத்தம் அதிநவீன தொழில் நுட்பத்தின் உதவியோடு பயங்கரவாதம் யூகோஸ்லாவிய மக்கள் மேல் ஏவப்பட்டது. நேட்டோ விமானிகள் நேட்டோ இராணுவத் தலைமையகத்திடமிருந்து நேரடியாக சற்றலைற் மூலம் கட்டளைகளைப் பெற்றனர். 100,000 கிலோ மீற்றர் தூரம் வரை ஒரு சென்றி மீற்றர் அளவிலான பொருளைக்கூட பார்க்கவும் படம் பிடிக்கவும் சற்றலைற் மூலம் இயலும்.

நேட்டோ ஆக்கிரமிப்பாளர்கள் யூகோஸ்லாவியாவின் முக்கியநகரங்களை, தொழிற்துறைகளைத் தாக்கினர் Navisad, Belgrad, Cacak Lucani, Nis மேல் தொடங்கி கொசவோவிலும் அதன் முக்கிய நகரான Paristinatp லும் மொன்ரநீக்ரோ Podgorica விலும் குண்டுகளை வீசினர். மே மாதம் முடிவுக்கிடையில் 60,000 விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சராசரியாக யுத்தத்தில் முழு யூகோஸ்லாவியாவிலும், கொசவோவாவிலும் தினமும் 250பேர் இறந்தனர் என்று மதிப்பிடப்படுகின்றது. 150க்கும் மேற்பட்ட பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், 14வைத்தியசாலைகள், 10,000 மேற்பட்ட தொடர்மாடிவீடுகள், 39 மிகப்பெரும் தொழிற்சாலைகள், 13 எண்ணெய் சேமிப்பிடங்கள், 7 விமான நிலையங்கள், 9முக்கிய ரயில் பாதைகள், 11 முக்கிய பாலங்கள், 7 முக்கிய ஐரோப்பிய நாடுகளைத் தொடர்பு படுத்தும் பெருவீதிகள், 12 தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள். என்பன அழிக்கப்பட்டன.

பெல்கிராட்டில் Rts தொலைக்காட்சி நிலையம் தாக்கப்பட்ட போது 10பத்திரிகை யாளர்கள் கொல்லப்பட்டனர். இத்தொலைக்காட்சி நிலையம் தாக்குப்படுவதற்கு ஒருமணிநேரம் முன்னதாக அங்கிருந்து CNN நிருபர் வெளியேறியமை CNN நிருபருக்கு தாக்குதலைப்பற்றிய செய்தி முன்பே உணர்த்தப்பட்டுள்ளது.அல்லது பெரும்பாலான CNN நிருபர்கள்போல அந்த CNN நிருபரும் உளவாளியாகவும் இருந்துள்ளான்.

யூன் நடுப்பகுதியில் ஜேர்மனியன் Stern பத்திரிகையாளர்கள் இருவர் கொசவோவில் கொல்லப்பட்ட போது பத்திரிகைச் சுதந்திரம், பத்திரிகையாளர்களின் பாதுகாப்புப்பற்றி பெரும் குரலில் சத்தம் போட்ட ஜெர்மனிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் Rts தொலைக்காட்சி நிலையத்தில் கொல்லப்பட்ட 10 செய்தியாளர்கள் பற்றி அவர்களின் கருத்து, மற்றும் பாதுகாப்புக்கு எதிரான நேட்டோ பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் பற்றி புலனடக்கம் காட்டினார்கள். நேட்டோவினால் அழிக்கப்பட்ட யூகோஸ்லாவியாவினுள் சேதம் 400 மில்லியன் டொலருக்கும் அதிகமாகும்.

யூகோஸ்லாவியாவின் 80% உற்பத்தி தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டுவிட்டன். சேர்பியமக்கள் உயிரிழப்புப்பற்றி கவலைப்படாத ஜெர்மனியப் பத்திரிகைகளில் ஒன்று பெல்கிராட் நகரில் உள்ள மிருகக்காட்சிச்சாலையில் யுத்தத்தில் ஏற்பட்டுள்ள அவலம்பற்றி படங்களோடு செய்தி வெளியிட்டு மனிதாபிமானம் காட்டியது. யுத்தத்தின் போது 14ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட ஐ.நா.வினால் பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்று இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட மரபுவழி கிறிஸ்தவ தேவாலயங்களும் அழிக்கப்பட்டன.

யூகோஸ்லாவிய மக்களின் பாசிசத்துக்கு எதிரான போராட்ட நினைவுச்சின்னங்கள் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டன. Majdanek இருந்த பாசிசத்தின் வெற்றி மீதான நினைவுச் சின்னம் Kragujevac இருந்த 1941ம் ஆண்டில் ஒக்டோபர் 21ம் திகதி காலை 7.00 மணிக்கு நாசிகளால் கொல்லப்பட்ட 2300 சேர்பிய மக்களுக்கான நினைவுச் சின்னம் என்பன சேதமடைந்துள்ளன.

இந்த Kragujevac நினைவுச்சின்னம் ஒரு ஜெர்மனிய நாசி இராணுவத்தின் சாவுக்கு 100 சேர்பியர்கள் ஒவ்வொரு காயப்பட்ட ஜெர்மனிய நாசி இராணுவத்தானுக்கு 50 சேர்பியர்கள் என்ற அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கொலைகள் நாசிகளால் நடாத்தப்பட்டது.

நேட்டோ பயங்கரவாதிகளின் குண்டு வீச்சுகளுக்கும் மனித அழிவுகட்கு மத்தியிலும் ஏப்ரல் 6ம் திகதி ஜெர்மனியப் பாசிசம் தம்மை தாக்கிய நாளை ஏப்ரல் 1941 நினைவுகூர சேர்பியமக்கள் கூடினார்கள்.

**(பாரிசில் இருந்து வெளிவரும் எக்ஸில் (EXIL) 09வது சஞ்சிகையில் தமிழரசன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு தொடராக பிரசுரிக்கப்படுகின்றது. (நன்றி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

# 2001 இல் சமாதான நம்பிக்கைகள்

எமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது பாலைவனத்தில் தண்ணீர் தேடும் முயற்சியாகிவிட்டது. கடந்த 20 வருடங்களில் கொடிய யுத்தமாக மாறிவிட்ட தேசிய இனப் பிரச்சினை இதுவரை 75,000 க்கும் மேற்பட்டவர்களின் உயிர்களை பலி கொண்டுள்ளது.

பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களையும் உடைமைகளையும் சர்வ நாசம் செய்துள்ளது. ஆனால் தீர்வு காண்பதற்கான மக்களின் எண்ணங்கள் இன்னும் கனவாகவே இருக்கின்றன.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கான உண்மையான தீர்வு தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் சுயமரியாதை கௌரவத்தை உறுதிப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது. ஆனால் தமிழ் முஸ்லீம் மக்களை இரண்டாந்தர பிரஜைகளாக நோக்கும் பௌத்த சிங்கள மேலாதிக்க மனோபாவம் நாட்டின் சகல நிர்வாக இயந்திரங்களிலும் வேரோடி கிளை பரப்பியுள்ளது.

பௌத்த மதபீடங்கள் அரசியலுடன் இணைந்து சிறுபான்மை இனங்களுக்கு எதிரான கூச்சலைக் கிளப்புகின்றன. அது தற்போது கிறிஸ்தவ மதத்தினருக்கு எதிராகவும், முஸ்லிம் தலைவர்களுக்கு எதிராகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பெரும்பான்மை சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் மக்கள் சமாதானத்தின் மீதான தமது பற்றுதலை அடிக்கடி வெளிப்படுத்தி வருகிறார்கள்.

காணாமல்போன படையினரின் பெற்றோர் உற்றார் உறவினரும், நல்லெண்ணம் கொண்ட மதத் தலைவர்களும், சில அரச சார்பற்ற நிறுவனங்களும் அதிகாரப் பகிர்வுடனான சமாதானத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

1994 இல் பொதுஜன முன்னணி அரசு பதவியேற்றபோது சமாதானம் பெரும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது. மீண்டும் புத்தாயிரம் ஆண்டு பிறந்தபோது மக்களிடையே ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது. ஆனால் ஏமாற்றங்களே இறுதியாகின.

யுத்தத்தின் சுமைகள் இன்று வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியுள்ளன. விலைவாசிகளும், யுத்தத்தின் கோரச்சுவடுகளும் ஒரு சமாதானத்திற்கான அங்கலாய்ப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

யுத்தத்தில் ஈடுபட்டுவரும் இருதரப்பாருமே இந்த நாட்டு மக்களின், இனங்களின் அபிலாஷைகளை பொருட்டாகவே எடுக்கவில்லை.

தற்போது மீண்டும் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமாதான முயற்சிகள். இருப்பினும் சகல தரப்பிலும் நம்பிக்கைகள் உருவாக இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

2001 இல் சமாதான நம்பிக்கைகள் ஊசலாடாமல் உறுதியடைவதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள திடசங்கல்பம் பூணுவோம்.

**அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

# தலைமைகளின் தவறான வழிகாட்டலே முரண்பாடுகளுக்கு வழி காட்டியது



குறிஞ்சி குமார்

இலங்கையில் லட்சக்கணக்கான தொழிலாளர்களை கொண்டிருக்கும் மலையகம் இன்று தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பலரிடம் கைகட்டி செயற்பட வேண்டிய துக்ககரமான நிலையை தோற்றுவித்துள்ளது. இத் தொழிலாளர்களின் உழைப்பு எமது நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான பங்கை வழங்கிக் கொண்டிருப்பது மட்டுமல்ல இத்தப் பெருந் தோட்டங்களை நீண்டகால குத்தகையில் நிர்வகித்துக் கொண்டிருக்கும் கம்பனிகளுக்கும், ஏன் தொழிற்சங்கங்களின் உயிரூட்ட செயற்பாடுகளுக்கும் முக்கிய காரணமாக இருக்கின்றன.

ஆரம்பத்தில் தொழிலாளர்களின் தொழிற்பிணக்குகளுக்கு போராடவும், தொழிலாளர்களின் தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்கவுமே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் இன்று அதன் தலைவர்கள் தங்களின் நலன்களுக்காக அவற்றைப் செயற்படுத்துவதும், தொழிலாளர்களைப் பகடைகாய்களாக பாவித்துக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைமையைக் கண்டு மலையகத் தொழிலாளர்கள் வெட்கி தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.






ஆரம்பத்தில் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த தொழிலாளர் தலைவர்களின் தியாக வாழ்க்கை வரலாறுகள் இன்றைய தலைமுறைக்கும் ஒரு பாடமாக இருந்தாலும் இன்று அவை கணக்கில் கொள்ளாத விடயமாகவே அமைந்துவிட்டன.

தொழிற்சங்கங்கள் பல கூறுகளாக பிரிகின்றமை தொழிலாளர்களையும் பல கூறுகளாக பிரித்து அவர்களின் ஒருமித்த தொழிலாளர் சக்தியையும் பலமிழக்கச் செய்த தவறுகளுக்கு பல தொழிற்சங்க தலைமைகள் காரணமாக அமைந்து விட்டன. கடந்த சம்பள உயர்வு போராட்டத்தின் போது தொழிற்சங்கங்கள் தெளிவற்ற நிலைமையால் போராட்டம் தோல்வியைத் தழுவியது.

மலையகத்தில் கடந்தமாதம் நடைபெற்ற தொழிற்சங்க வாரத்தின் போது தொழிற் சங்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக தொழிற்சங்க வாரத்தை கொண்டாடின.,

பிந்தனுவெவ படுகொலை சம்பவத்தின் பின்னர் மலையகத்தில் அதன் பாதிப்பு ஏற்பட்டபோது தொழிற்சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முரணாகச் செயற்பட்டன. ஒருவருக்கொருவர் பழிவாங்கிக் கொள்ளும் விதமாகவே நடந்து கொண்டனர். இதனால் மக்களின் உணர்வுகள் புறக்கணிக்கப்பட்டு மக்கள் துன்பப்படுகின்ற நிலைமைகளே அதிகமாகின.

இவையெல்லாம் இப்போது மலையகத் தொழிற்சங்கங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கின்றன என்பதைக் காட்டுகின்ற உதாரணங்கள் எனலாம்.

மேலும் தொழிற்சங்க காரியாலய நிர்வாகங்களில் உள்ள நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையேயான உறவு நெருக்கமற்றதாக அந்நியமான ஒன்றாகவே காணப்படுகின்றது.

போராட்டங்களுக்கும் இந்த தொழிற்சங்க நிர்வாகிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இருப்பதில்லை. ஆனால் இவர்கள் சம்பளத்துக்காக வேலை செய்யும் ஊழியர்கள் போலவே உள்ளனர். தொழிலாளர்கள் மீது எந்தவித பற்றுமற்ற இவர்களே தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுகின்ற பரிதாப நிலையே மலையகத்தில் காணப்படுகின்றது.

இவர்கள் லஞ்சத்தை நோக்கமாக கொண்டு தங்களுக்கு இலாபகரமான வேலைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

இவ்வாறான பிரதிநிதிகள் தோட்டங்களில் நடக்கும் போராட்டங்களின் போது தோட்ட நிர்வாகத்தினரிடம் பணத்தை பெற்றுக் கொண்டு தொழிலாளர்களின் போராட்டங்களை தோட்ட நிர்வாகங்களுக்கு விற்றுவிடுகின்ற நிலைமையை நாம் அவதானிக்கலாம்.

(தொடர்ச்சி 07பக்கம்)

# மன்னார் ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கடந்த 11.12.2000 அன்று காலை 8 மணியளவில் 100க்கு மேற்பட்ட வைத்தியசாலை சிற்றூழியர்கள் சுலோகங்களைத் தாங்கியவண்ணம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் தமது கடமை நேரத்தைவிட மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கான கோடுப்பனவைத் தரவேண்டும் என்று பலமுறை மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் இவர்களின் கோரிக்கைகள் பயனளிக்காததினாலேயே போராட்டத்தில் குதித்தார்கள்.

01.12.1999 தொடக்கம் 05.12.2000 திகதி வரையிலான மேலதிக நேர கொடுப்பனவைக் கோரி பொறுப்பான அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு சென்றதும் குறிப்பிடத்தக்கது. முயற்சிகள் பயனற்ற நிலையிலேயே போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இப்போராட்டத்தில் மருத்துவமனையில் இருக்கக்கூடிய நோயாளிகளை பாதிக்காத வண்ணம் இருக்க காலையில் வைத்திய சேவைகளைச் செய்து முடித்த பின்பே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

வைத்திய சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்ததைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பாக மன்னார் அரசாங்க அதிபர் திரு.வே. விஸ்வலிங்கம் அவர்கள் திருகோணமலை சுகாதார திணைக்கள பிரதான கணக்காளருடன் தொடர்பு கொண்டார். இவ் வைத்தியசாலையில் 50க்கும் மேற்பட்ட சிற்றூழியர் பதவிகள் வெற்றிடமாக உள்ளது.

இவ்வெற்றிடத்திற்கான வேலைகளையும் தற்போதுள்ள சிற்றூழியர்களே பகிர்ந்து வேலை செய்து வருகிறார்கள். இதனால் இவர்களின் கோரிக்கை நியாயமானது எனக் கருதுகிறேன் என்றார்.



இவ் ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்ய மாதம் ஒன்றுக்கு 25,000 ரூபா தேவை என சுட்டிக்காட்டிய அரசாங்க அதிபர் சாதகமான பதிலையும் கேட்டு இருந்தார். இதற்கு அமைவாக நவம்பர் மாதத்தில் மேலதிக கடமையில் ஈடுபட்டவர்களுக்கு அவர்கள் உண்மையாக நிறைவேற்றிய மேலதிக நேரக் கொடுப்பனவை டிசம்பர் மாதத்தில் வழங்குவது என்றும் டிசம்பர் மாதத்திற்கான கொடுப்பனவை ஜனவரி மாதத்தில் வழங்குவது என்றும் வாக்குறுதியளிக்கப்பட்டதன் முடிவிலே வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலைக்குத் திரும்புவது என ஊழியர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

ஆனாலும் இவர்களுக்காக 10 மாதங்களுக்கு மேலான நிலுவைப்பணம் தொடர்பாக எந்த நம்பிக்கைகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மக்களுக்கும் மருத்துவ சேவைக்கும் கடுமையாக உழைக்கும் சிற்றூழியர்களின் நலன்களையும் தேவைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டியது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.

**வைத்தியசாலை சிற்றூழியர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 37/2,1/1 விமலசார றோட், களுபோவில, தெகிவளை அவர்களால் இரத்திரனப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.